எனது குருநாதர்



ஸ்ரீராமகிருஷ்ண மடம் மைலாப்பூர்
சென்னை

எனது குருநாதர்

ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள்

அமெரிக்கா தேசத்தில் செய்த
பிரசங்கத்தின் மொழி பெயர்ப்பு

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை.

இஃது சென்னை
ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துத் தலைவரால்
பிரசுரிக்கப்பட்டது.

முதற் பதிப்பு 10-39 XX
இரண்டாம் பதிப்பு 3-43 XX
மூன்றாம் பதிப்பு 4-45 XXXIII

விலை அணா 6.

The Liberty Press, Madras

முகவுரை

'உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு'.

என்ற நக்கிரர் வாக்கிற்கிணங்க, ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள் தமது அருட்பெரும் தவக் குரவராகிய பகவான் ஸ்ரீராமகிருஷ்ணதேவரின் விழுமிய சிறப்பியல்பினை உலகத்தவரும் கேட்டு இன்புற்று அறியுமாறு 'எனது குருநாதர்' என்று மகுடந்தாங்கிய உபந்நியாசமொன்றை அமெரிக்கா தேசத்தில் நிகழ்த்தியருளினர். அதன் மொழிபெயர்ப்பே இந்நூலில் கண்ட விஷயமாகும்.

தமது குருநாதரைப்பற்றி அந்நாட்டினருக்கு எதன்பொருட்டு எடுத்துச்சொன்னர் என்ற சந்தேகம் எழுவது இயல்பே. அதற்கு ஸ்ரீ விவேகானந்தசுவாமிகளே விடைபகர்ந்தருளியிருக்கின்றார். 'நான் அங்குச்செய்த அநேக உபந்நியாசங்கள் அமெரிக்கர்பலரின்சிந்தனையைக்கவர்வதாயிற்று. ஹிந்துமதத்தின் அரும்பெரும் உண்மைகளை அவர்கள், முன் பல

ரிடமிருந்து கேட்டிருந்தனரேனும் யான்விளக்கியவாறு அவர்கள் எவரிடமிருந்தும் கேட்டதில்லை என்றனர். மேலும், யான் உபந்யாசித்துக்கொண்டிருக்கும்போது என்னிடத்தில் ஏதோ ஓர் அபார சக்தி நிலவியிருப்பதையும் பலர் கண்டு எனக்குத் தெரிவித்திருந்தனர். இன்னும் சிலர், இவ்வற்புத ஆற்றல் எனக்கு எங்ஙனம் உண்டாயிற்று என்றுங்கேட்டனர். அளவிறந்த எத்தனையோ உபந்யாசங்களை யான் அங்கு நிகழ்த்தியிருந்தாலும் எனது குருநாதரைப்பற்றி எவருக்கும் நான் சொன்னதே கிடையாது. அவரது திருப்பெயரையேனும் கூறினேனல்ல. ஆகவே பகவானின் தனிச் சிறப்பியல்பினை சுருதி யுக்தி அநுபவம் என்ற பிரமாணங்கள் வாயிலாக யான் கண்டுணர்ந்தவாறு அவர்கள் முன்னர்க் கூறக் கடமைப் பட்டவனுயினேன்' என்று சுவாமிகள் விடைபகர்ந்தருளினுர்.

குருவின் லக்ஷணத்தைப்பற்றி நமதுசாஸ்திரங்கள் பரக்கக் கூறுகின்றன; ஆனல்

அவற்றிற்கு லக்ஷியமாக உயிருடன் காணும் ஒருவரைத் தரிசிப்பது அரிதினும் அரிது. அப்படி ஒருவர் உளராயினும், பக்குவமுள்ள ஆன்மாக்களைத் தமது கிருபையினால் ஆட்கொள்ளும் மகான் அவதரிப்பது துர்லபம். அப்படிப்பட்ட ஒருவரே பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவர். அம்மகானின் ஒப்பற்ற சிறப்பினை வேறொரு மகான் வாயிலாக அறிதல் நமது பாக்கியமே.

ஆதலால் தமிழ் மக்கள் யாவரும் இவ்வவதாரபுருஷர் யாருக்குக் குருநாதராகத்தோன்றியருளினரோ அவர் மூலமாகவே அப்புனித புருடர் சரிதத்தைக் கேட்டு இன்புறுவார்களாக.

மயிலாப்பூர்,
1—10—1939.

பதிப்பாளர்

எனது குருநாதர்

"தர்மம் எவ்வெப்பொழுது குன்றி அதர்மம் மேலோங்குகின்றதோ, அவ்வப்பொழுது மனிதவர்க்கத்தின் நன்மையின் பொருட்டு நான் உலகில் தோன்றுகின்றேன்" என்று கீதையிலே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கூறினர். இந்த உலகின் வளர்ச்சிக்கு ஒரு புதிய ஒழுங்குமுறை எப்பொழுதெல்லாம் வேண்டுமோ அப்பொழுதெல்லாம் வல்லமை வாய்ந்த பேரலையொன் றெழுகின்றது; ஆத்மிகம் பௌதிகம் என்னும் இரண்டு நிலைகளிலே மனிதன் ஜீவித்து வருவத

ஞலே ஒழுங்கு முறையாகிய அலைகள் அவ்விரண்டு இடங்களிலும் எழுகின்றன. பௌதிக நிலையின் ஒழுங்கு முறைக்கு ஐரோப்பாவே இக்காலத்தில் தலைமைவாய்ந்த இடமாக இருந்து வருகின்றது. ஆத்மிக ஒழுங்கு முறைக்கோ, உலக சரித்திர காலமுதல், ஆசியாவே அடிப்படையாக இருந்து வந்திருக்கின்றது. ஆத்மிக நிலையிலே மற்றுமொரு ஒழுங்கு முறையை மனிதன் இன்று வேண்டி நிற்கின்ருன். லௌகிக எண்ணங்கள், உயர்நிலையில் வன்மை பெற்று இருக்கும் இந்நாளிலே—சடத்தைச், சார்ந்த வாழ்க்கை வளருவதனுல் மனிதன் தன் தெய்விகத் தன்மையை மறந்து பண மியக்கும் கருவியாகத் தன்னை ஆக்கிக் கொள்ளும் இந்நாளிலே—அதினின்றும் அவனைத்

திருப்பித் திருத்தவல்ல ஒரு சக்தி தோன்றுவது அவசியமேயாம். அவ்வாறே குவிந்து இருக்கும் சடவாத மேகங்களைத் துரத்துவதற்கான ஒரு சக்தி தோன்றிவிட்டது! அது செயலாற்றத் தொடங்கி விட்டது!

இந்த உலகத்தின் செழிப்பு, மக்களுள் ஒவ்வொருவரும் பங்கெடுத்துக் கொள்ளும் வழியில் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஒரு மனிதனே எல்லாவற்றையும் தனதாக்கிக் கொள்வான் என்பது வீண்பேச்சேயாகும். அங்ஙனமாகவும் மக்கள் எவ்வளவு சிறு பிள்ளைத் தனமாக விருக்கின்றனர்! குழந்தையானது தனது அறியாமையால் விளையாட்டுக் கருவிகளே இவ்வுலகில் தான் ஆசைப்படக் கூடிய சிறந்த பொருளென நினைக்கின்றது. அவ்வி

தமே சடசக்தியின் நிறைவால் மேன்மையுற்றிருக்கும் ஒரு தேசமக்கள் அது ஒன்றே விரும்பி அடையத் தக்கது எனவும், அதுவே வளர்ச்சிக்குக் காரணமென்றும், அதுவே நாகரிகத்தின் பாற்படு மெனவும் நினைப்பதோடு, பிற தேசத்தார் அச் சட சக்தியைப் பெற விரும்பாமலும் அச்சக்தியைப் பெறுமலும் இருப்பின் அவர்கள் உயிருடன் வாழவே தகுதியற்றவர் எனவும் அவர்கள் இருப்பே பயனற்றது எனவும் நினைக்கின்றனர் ; என்றாலும் வெறும் சடநாகரிகம் முற்றும் பயனற்றதென வேறொரு தேசத்தார் கருதவும் கூடும். சூரிய மண்டலத்தின் கீழேயுள்ள அனைத்தையும் அடையப் பெற்றிருந்தும் ஆத்மிக விஷயத்தில் பற்றுக் கொள்ளாதிருந்தால் உண்டாகும் பயன்

யாது? என்று முன் ஒருமுறை உல கிற் குபதேசித்த குரல் கீழ்த்திசையி னின்றும் எழும்பிற்று. இதுவே அத் திசையின் குறிக்கோள். மற்றது மேல் நாட்டாரின் நாட்டமாகும்.

இந் நோக்கம் ஒவ்வொன்றும் பெரு மை படைத்ததாகவே இருக்கின்றது. ஒவ்வொன்றும் பிரகாசம் பொருந்தி யதே. இப்பொழுது நாம் விரும்பும் சீர்திருத்தமானது, இவ்விரண்டு நோக்கங்களேயும் சமரசப் படுத்துவ தாம். அது இவ்விரண்டு லக்ஷியங்களே யும் ஒற்றுமைப் படுத்துவதாக விருக் கும். மேல் நாட்டார்க்குப் புலன்க ளாற் பெறக்கூடிய உலகம், எவ்வளவு உண்மையோ அதேபோன்று கீழைத் தேசத்தவர்க்கு அத்யாத்மிக உலகு உண்மையாக மிளிர்கின்றது. அவசிய

மானதும் விரும்பத்தக்கதுமானபொரு ளையும் ஆத்மிகவிஷயங்களிலே கீழ்நாட் டான் காண்கிருன்; வாழ்க்கையை உண் மையாகத்தெளிவுபடுத்தும் ஒவ்வொன் றையும் இவன் இதில் காண்கிருன். மேல் நாட்டானுக்கு, கீழ் நாட்டான் கனவு காண்பவனைப் போல் தோற்று கிருன். ஆனல் கீழைத் தேசத்தவ னுக்கோ, அழியும் விளையாட்டுக் கருவி களுடன் பொய்மை வாழ்க்கையை நடத்தும் குழந்தை போன்ற மேல் நாட்டார் வாழ்க்கை கனவு போலத் தோன்றுகிறது. வயது முதிர்ந்த ஆட வரும் பெண்டிரும், விரைவிலோ சிறிது தாமதித்தோ தவருமல் அழிந்து போகக் கூடிய சிறு சடப் பொருளை மிகப் பெரிதாகப் பாராட்டுவதை நினைக்குந் தோறும் இவன் புன்னகை

கொள்கிறுன். ஒவ்வொருவரும் மற்ற வரைக் கனவு காண்பவராக நினைக்கின் றனர். எனினும் மனித வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு மேனுட்டுலக்ஷியம் எவ்வளவு அவசியமோ அவ்வளவுக்குக் கீழ் நாட்டார் லக்ஷியமும் இன்றியமை யாததே. அன்றியும் கீழ்த்தேசத்துக் கொள்கையே மிக்க நன்மை பயக்கவல் லது என நான் கருதுகின்றேன். இயந் திரங்கள் எப்போதும் மனித வர்க் கத்தை இன்புறச் செய்ததில்லை, செய் யப்போவதுமில்லை. எவர் இதை நம்பச் செய்ய முயலுகின்றனரோ அவர் இன் பங்கள் இயந்திரத்தையே சார்ந்திருப்ப தாகச் சாதிப்பர். ஆனல் இன்பமோ மனத்தில் இருக்கின்றது. எம்மனிதர் தம் மனதிற்குத் தலைவராக இருக்கின் றனரோ அவர்களே சுகமுள்ளவராவர்;

மற்றெவருமில்லே. இருக்கட்டும் ; இவ் வியந்திரச் சக்தி என்பதுதான் என்ன? ஒடும் மின்சார சக்தியை ஒரு கம்பி யின் மூலம் செலுத்தக்கூடிய ஒரு மனி தனைப் பெரியவன் என்று ஏன் மதிக்க வேண்டும்? அவன் நுண்ணறிவுடையா னென ஏன் கருதப்படல் வேண்டும்? இதைப் பார்க்கிலும் இலக்ஷ மடங்கு அதிகமான விசித்திரங்களை இயற்கை ஒவ்வொரு கணமும் செய்யவில்லையா? ஆகவே அந்த இயற்கைத் தாயை அடி பணிந்து ஏன் வணங்கக் கூடாது? நீ சக்ரவர்த்தியாக இருப்பினும் உலகின் ஒவ்வொரு அணுவையும் நீவசப்படுத்தி இருப்பினும் உனக்கு அவற்றினல் உண் டாகும் பயன் என்ன? உன்னை இன் புறச் செய்யும் சக்தி உன்னுள்ளே இருந்தா லொழிய—உன்னையே நீ

வென்று லொழிய—அவை யேதும் உன்னை இன்புறச் செய்யா. மனிதன் இயற்கையை வெல்லுவதற் கென்றே பிறந்தவன்; இஃது உண்மை. ஆனால் மேல் நாட்டார், இயற்கையெனின் சட சம்பந்தமான வெளிப் பிரபஞ்ச மெனவே கருதுகின்றனர். வெளிப்பிர பஞ்சம், தன் மலைகளாலும் கடல்களா லும், ஆறுகளாலும், அளவுகடந்தசக்தி களாலும், கணக்கிட முடியாத மாறு பாட்டாலும் கம்பீரத் தோற்றத்தை யுடையதென்பது உண்மையே. எனி னும் சூரிய சந்திரநக்ஷத்திரங்களை விடப் பெரியதும் நம் இந்த உலகினைக் காட்டி லும் சிறந்ததும், வெளிப் பிரபஞ்சத்தை விஞ்சியதும், நம்முடைய இச்சிறு வாழ்க்கையைக் கடந்து அப்பாற்செல் லக் கூடியதுமான வேறு ஓர் கம்பீரத்

தன்மை மனிதனுக்குள்ளே இருக்கின்றது. இத்துறையிலும் நாம் அறிந்துகொள்ள வேண்டிய விஷயம் பல இருக்கின்றன. மேல் நாட்டவர் வெளிப்பிரபஞ்சத்தில் திறமை பெற்றிருப்பது போலக் கீழ் நாட்டார் ஆத்மிகத் துறையில் சிறப்புற்றிருக்கின்றார்கள். ஆகவே ஆத்மிக—மத சம்பந்தமான-சீர்திருத்தம் வேண்டும்போதெல்லாம் அது கீழ் நாட்டவரிட மிருந்தே தோன்றுவது பொருத்தமாகின்றது. கீழ் நாட்டவர்கள் இயந்திர (தொழில்) விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமெனின் மேல் நாட்டாரது அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டுமென்பதும் உண்மையே. அதே போல மேல் நாட்டாரும் ஜீவான்மா பரமான்மாக்களைப் பற்றியும் அண்ட சராசரத்தின் உண்

மைப் பொருளைப் பற்றியும் அறிந்து கொள்ள விரும்பினால் பாரதமக்களின் அடிச் சுவடுகளைப் பின்பற்றி அறிந்து கொள்வது இன்றியமையாத தாகும்.

ஆத்ம சக்தியாகிய இவ்வித அலையை —மதச் சீர்திருத்த மெனும் ஓர் அலையை—இந்தியாவில் எழுப்பிவிட்டிருக்கும் ஒரு பெரியாரது வாழ்க்கைச் சரிதத்தைப்பற்றி உங்களுக்குச் சொல்லப்போகின்றேன். இப்பெரியார் வாழ்க்கையைப் பற்றிப் பேசுவதன் முன் இந்தியாவின் இரகசியத்தைப்பற்றியும் இந்தியாவின் குறிக்கோள் யாது என்பதைப் பற்றியும் உங்களுக்கு ஒரு சிறிது அறிவிக்க முயலுகிறேன். அளவுகடந்த சடப்பொருளின் சேர்க்கையால் மயக்குண்டு குருடுபட்ட கண்களை யுடையவர்கள், உண்பதற்கும் களி கொள்வ

தற்கு மெனவே தங்கள் வாழ்நாள் உள்ளதென நினைப்போர்கள், பொன்னும் பூமியுமே ஒருவன் பெறுதற்குரிய பேறெனக் கருதுபவர், இந்திரியசுகமே அடையத் தகுந்த சுகமெனக் கருதுபவர், பணத்தையே பகவானுகப் பாவிப்பவர், இவ்வுலகில் உள்ள வரையில் சுகஜீவியா யிருந்து பின் மரணத்தோடு அனைத்தும் முடிகின்ற தெனக் கொள்பவர், ஆத்மிக விஷயமான உயர்நோக்கத்தை ஒரு சிறிதும் சிந்தியாத மனமுடையவர் (உலகாயதர்), தங்கள் வாழ்க்கையைச் சூழ்ந்திருக்கும் பொருள்களை யன்றி மேலானதுவேறு ஒன்று இருப்பதாக நினையாதவர்கள் ஆகிய இத்தகையோர் இந்தியாவை நோக்குவரேல், ஏழ்மை, அசுத்தம், குருட்டு நம்பிக்கை, அறியாமை, கடுந்தோற்றங்

கள் ஆகிய இவைகளே எங்கும் நிறைந் திருப்பதாகக் காணக்கூடும். ஏனெனில் அறிவுடைமை, நாகரிகம் என்பனவெல்லாம் உடை, கல்வி, சமூகவொழுக்கம் ஆகியவைகள் என்றே இவர்கள் மனத்திற்குப் படுகின்றது. இம்மேலைத் தேசத்தவர் புறப்பொருள் அபிவிருத்திக்கான எல்லா முயற்சிகளையும் கையாளுவதைப் போல, கீழ் நாட்டார் அதற்கு மாறுபட்ட ஆன்ம ஞான மார்க்கத்தில் மனத்தைச் செலுத்தியிருக்கின்றனர். உலக சரித்திரத்திலேயே வேற்று நாட்டவரை வெல்வதற்கெனத் தமது எல்லையைக் கடவாத மக்கள் பாரத நாட்டாரேயாவர். உலகத்திலுள்ள மனிதர்களில், பிறருக்குரியவற்றைப் பெற விரும்பாதவர் கீழ் நாட்டு மக்களே. அவர்களது நாடு

செழிப்பாயிருந்ததோடு, நெற்றி வியர்வை நிலத்தில் விழும்படி உழைத்துத் திரவியம் திரட்டியிருந்த குற்றமும் உடையவராக இருந்தார்கள்! இக் குற்றமே பிற தேசத்தோர் நம் நாட்டைக் கொள்ளையடிக்கும்படி தூண்டுவதாயிற்று. தங்களை அநாகரிகரென்று பிறர் நினைத்தாலும், தங்களைக் கொள்ளையடித்தாலும் பாரத மக்களுக்குத் திருப்திதான். அவர்களோ, கடவுளுண்மையை உலகமெங்கணும் பரவச் செய்வதும், மனித சுபாவ இரகசியங்களை அனைவர் முன்னும் எடுத்துச் சொல்வதும், மனிதனை மூடியிருக்கும் திரையைக் களைந்தெறிவது மாகிய செயலையே மேற்கொண்டனர். ஏனெனில் கனவின் உண்மை அவர்களுக்குத் தெரியும். மேலும் இச்சடத்திற்குப்

பின்,பாபத்தால் பாதிக்கப் படாததும், குற்றத்தால் குறைபடாததும் காமத்தால் கெடாததுமான உண்மைத் தெய்விக சக்தியுள்ள மனிதன் மிளிர்கின்ரு னென்பதை அவர்களறிந்துள்ளார்கள். இத்தெய்விகத் தன்மை இன்னும் எத்தகையதெனின் நெருப்பால் எரிக்க முடியாதது; நீரினுல் நனேக்கப்படாதது; வெயிலினுல் உலரமாட்டாதது. மரணமும் இதைக் கொல்ல முடியாது. மேலேத்தேசத்தவர்களின் இந்திரியங்களுக்கு உலகப் பொருள்கள் எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை யுடையதாகும் பாரத மக்களுக்கு மனிதனுக்குப் பின்னுல் இருக்கும் தெய்விக சக்தி. வெற்றி முழக்கத்துடன் பீரங்கியின் முன்னே குதிப்பதற்கு நீங்கள் (பேனுட்டார்) தைரி

யங் கொள்வது போலவும், தேசாபி மானத்தாலே தாய் நாட்டிற்காக உங்களது உயிரையும் தியாகம் செய்யத் துணிவு கொள்வது போலவும் அவர்கள் கடவுளின்பேரால் எதைச் செய்வதற்கும் உறுதிகொள்கின்றனர். இவ்வுலகம் கற்பனு சக்தியினுல் ஆனதென்றும், இங்கு நடைபெறுவன வனைத்தும் கனவு போன்று அழியும் இயல்பின என்றும் ஒருவன் கூறும்போது, அவன் நம்புவதும் நினைப்பதும் உண்மையென மெய்ப்பிப்பதற்காகத் துணிமணிகளையும் சொத்து சுதந்திரங்களையும் களைந்தெறிந்து விடுவதும் பாரத நாட்டிலேயே நிகழக்கூடியதாம். ஜீவன் அழிவற்றவன் என்று ஒருவனுக்கு விளங்கும்போது அவனோர் நதிதீரத்திலமர்ந்து நீங்கள் ஒரு சிறு துரும்பை

வீசி யெறிவதைப்போலத் தன் சரீரத்தைக் களைந்தெறிய விரும்புகின்றதும் அவ்விடத்தில்தான். இவ்வித மனோபாவனைகளிலே பாரத மக்களது வீரம் வெளிப்படுகின்றது. தங்களுக்குச் சாவே இல்லையென்று உணர்ந்திருப்பதனாலே அவர்கள் சாவை அன்புடன் எதிர்பார்க்கின்றனர். அநேக நூற்றாண்டுகளாக அந்நியதேசத்துப் படைகளாலும் கொடுங்கோல்ஆட்சியினாலும் தோல்வியுற்றுமிருப்பதே அவர்கள் பலத்தைக் காட்டப்போதியதாம். அச் சமூகம் இன்றும் உயிர் வாழுகின்றது. ஒரு சிறு நன்மையுமே வெளிப்படாத அதிகோர காலங்களிலும் மகிமை பொருந்திய ஆத்மிக புருஷர்கள்தோன்றுமிருக்கவில்லை. கீர்த்திபொருந்திய பௌதிக சாஸ்திரிகளையும் திறமை

வாய்ந்த ராஜ தந்திரிகளையும் மேனாடு தோற்றுவித்திருப்பது போல ஆத்ம ஞானம்பொருந்திய மஹா புருஷர்களை இச்சமூகம் உண்டாக்குகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பிய நாகரிக வெள்ளம் இந்தியாவில் பாயத்தொடங்கியகாலத்திலே, மேனாட்டு வெற்றிப் போர்வீரர் உடைவாள் ஏந்திய கைகளுடன் மஹாரிஷிகளின் வழியில் வந்த மக்களைப் பார்த்து, 'காட்டு மிராண்டிகள்' எனவும், 'கனவு காணும் சமூகம்' எனவும் அவர்கள் மேற்கொண்டுள்ள மதம் மூட நம்பிக்கை யாயது எனவும், மக்கள் பெரு முயற்சியாலும் தியாகத்தாலும் அடையும் கடவுள் ஆன்மா என்றின்னவைகள் எல்லாம் பொருளற்ற வீண் சொற்களே எனவும், அநுசரித்து

வரும் துறவு நிலைமையெல்லாம் பய னற்றன எனவும் ஏளனஞ் செய்து மெய்ப்பிக்க முயன்ற பொழுதிலே, ‘மிக நெடுங்காலமாகத் தங்கள் சமூகம் நிலைத்து நடத்திய வாழ்க்கை வீணே? பழைய சாஸ்திரங்களைக் கிழித்தெறிந் தும் தத்துவங்களைத் தீயிட்டுக்கொளுத் தியும் மதபோதனை செய்யும் ஆசாரியர் களை அகல வோட்டியும் கோயில் குளங் களை இடித்து வீழ்த்தியும் மேனாட்டவ ரைப் போன்றே தங்கள் வாழ்க்கை யையும் அமைத்துக்கொள்ள வேண் டுமோ?’ என்றின்னவாறன கேள்வி கள் கலாசாலையில் பயின்றுவந்த வாலி பர்களின் உள்ளத்திலே ஊசலாடத் தொடங்கின. கத்தி முனையினாலும், துப்பாக்கியினாலும், அதிகாரத்தாலும், செல்வத்தாலும் மதத்தைப் பரப்பிய

மேனாட்டு வெற்றிவீரன், பழைய வழிக ளெல்லாம் விக்கிரக ஆராதனையும் குருட்டு நம்பிக்கையுமேயன்றி வேறில் லையென்றுசொல்லவில்லையா? மேனாட்டு நாகரிக முறையிலே தோற்றுவித்த பள்ளிக்கூடங்களில் தங்கி வாசித்து வந்த சிறுவர்களின் உள்ளத்திலே மேற் கூறியவை ஆழப் பதிந்திருந்ததினால் அவர்கள் தம் தாய் நாட்டுப் பழக்க வழக்கங்களைப் பற்றிச் சந்தேகப்படத் தொடங்கியதில் ஆச்சரியம் ஏதுமில்லை. ஆனால் குருட்டு நம்பிக்கைகளைக் களைந் தெறிந்துவிட்டு உண்மையைக் காண் பதற்கான வேறு முயற்சிகளைக் கைக் கொள்ளுவதற்கு மாறாக 'மேனாட்டார் நினைப்பதும் சொல்லுவதும் எழுதுவ தும் என்ன' என்பதே உண்மையின் பிரமாணமாகி விட்டது. 'ஆசாரியர்கள்

அகன்று விட வேண்டும்! வேதங்கள் தீயினால் வெந்து நாசமாக வேண்டும்! ஏனெனில் மேனாட்டார் இவ்விதம் கூறுகின்றனர்' என அச்சிறுவர் கூறலாயினர். இவ்விதம் தோன்றிய குழப்பத்தினிடையே பெயரளவிலே சீர்திருத்தமென்று சொல்லும் ஓரலை இந்தியாவிலே கிளம்பிற்று.

"நீ சீர்திருத்தக் காரனாக உண்மையில் இருக்க விழைவா யாகில் கீழ்க்காணும் மூன்று அம்சங்களைப் பெற்றிருக்க வேண்டும். முதலாவதாக அநுதாபம்; உன் சகோதரர்களிடம் நீ உண்மையில் அநுதாபம் கொண்டிருக்கின்றனையா? உலகத்திலே அறியாமையும் குருட்டுநம்பிக்கையும் துன் பமும் நிறைந்திருப்பது குறித்து உண்மையில் நீ உணர்ச்சி கொள்கின்றனையா?

மனிதர் அனைவரும் உன் சகோதரர் என்று உண்மையில் நீ உணர்கின்ற னையா? இவ்வித எண்ணம் உன் உள் ளெல்லாம் பாய்ந்து பரவி யிருக்கின் றதா? இவ்வுணர்ச்சி உன் இரத்தத் துடன் கலந்து தேக முழுதும் ஓடுகின் றதா? இவ்வுணர்ச்சி உன் இருதயத் துடனும் நாடியுடனும் சேர்ந்து துடிக் கின்றதா? உன் சரீரத்தின் ஒவ்வொரு நுண்ணிய பாகத்திலும் நரம்பிலும்இவ் வெண்ணம் ஓடிப் பரவுகின்றதா? அநு தாபம் என்ற எண்ணமே நிறையப் பெற்ற ஒருவனாக இருக்கின்றனையா? இப்படி இருப்பாயாகில் சீர்திருத்தக் காரனாவதற்கு முதற்படி ஏறியவனா வாய்." "அடுத்தபடியாக நீ இவைகளுக் கேதேனும் பரிகாரம் கண்டுபிடிக்கின் றனையா? என்று எண்ணிப்பார். பழைய

கொள்கைகள் முற்றும் குருட்டு நம்பிக்கையாய் இருந்திருக்கலாம்; எனினும் இக் குருட்டு நம்பிக்கைக்குவியல்களின் உள்ளும் புறமும் பளபளப்பான பொற்பாளங்களும் உண்மைகளும் பொதிந்து கிடக்கின்றன. மலின மேதுமில்லாமல் அப்பொன்னை மட்டில் காப்பதற்கான வழி ஏதேனும் புலனாயிற்று? அதாவது குருட்டு நம்பிக்கையான அழுக்குகளே இல்லாமல் உண்மைப் பொருளைக் காப்பதற்கான மார்க்கமேதும் கண்டு பிடித்துள்ளனையா? இவ்விதம் நீசெய்வாயாகில் இரண்டாவதுபடி யேறியவனுவாய்.'' "மூன்றாவதாக உன்னுடைய மனோபாவம் எப்படிப்பட்டது? பொருளின் மீதுள்ள பேராசையாலும் புகழ் அதிகாரம் இவற்றின் மீதுள்ள தாகத்தாலும் நீ தூண்டப்படவில்லையென்

பதை நிச்சயமாக நம்புகின்றனையா? உலகமனைத்துமே ஒன்று சேர்ந்து உன்னை நொறுக்கித் தள்ளுவதானாலும் உன் கொள்கையில் உறுதியாக நின்று வேலை செய்யமுடியும் என்று உன்னால் உறுதி கூற முடியுமா? உன்னுடைய தேவைஎதுவெனஉனக்குத்தெரியுமா? உயிரே போய் விடக்கூடிய நிலையிலிருக்கும்போதும் கடமைஒன்றையே செய்யக் கூடியவன் என்பதைநீ நிச்சயமாக நம்புகின்றனையா? உனது உயிரைத் தாங்கியிருக்கும் வரையிலும் இதயத் துடிப்புக் குறையும் வரையிலும், நீ கொண்டதை விடாது செய்வாய் என்பதையும் நிஜமாக நம்புகின்றனையா? அப்பொழுதே நீ உண்மைசீர்திருத்தக்காரன் ஆவாய்; அப்பொழுதே நீ ஆசாரியன் ஆவாய்; மனித வர்க்கத்

திற்கே ரக்ஷகன் ஆவாய்.'' ஆனால் மனிதனே பொறுமையற்றவனாகவும் குறுகிய நோக்கமுடையவனாகவுமேபெரும் பாலும் இருக்கின்றான்! சிறிது பொறுமையுடனிருக்க அவனுக்கு அமைதியில்லை; உற்று நோக்கி உண்மை உணரும் வன்மையும் அவனிடம் கிடையாது. அவன் ஆளுவதற்கு ஆசைப்படுகின்றான். பயனை மிக விரைவிற் பெற விரும்புகின்றான். ஏன்? பயனைத் தானே அநுபவிக்க ஆவல் கொள்கின்றான். பிறரைப் பற்றிய கவலை உண்மையில் ஒரு சிறிதும் அவனுக்கில்லை. கடமையைக் கடமையின் நிமித்தமே செய்வதை அவன் விரும்புகிறதில்லை. "பணி செய்வதற்கே உனக்கதிகார முண்டு, பலனுக்கன்று'' என்று ஸ்ரீ கிருஷ்ண பகவான் கூறுகின்றார். பயனைப் பெறு

வதில் ஏன் பற்றுக்கொள்ள வேண்டும்? நாம் புரியவேண்டிய பணிகள் நமக்கானவை; பலன்கள் வருகிறபடி வரட்டும். ஆனல் மனிதனுக்கோ பொறுமையில்லே. அவன் எக்காரியத்தையும் கைக்கொள்ளுகிருன். உலகெங்கணுமுள்ள பலர் பெயரளவில் சீர்திருத்தக்காரர் என்னும் இவ்வகுப்பைச் சார்ந்தவரே.

நான் மேலே கூறியபடி, இந்தியாவிலே மிக விரைவாகப் பாய்ந்து பரவிய மேனுட்டு நாகரிக வெள்ளத்தால் ரிஷிகள் கண்ட மேலான தத்துவங்கள் எல்லாம் அடித்துக்கொண்டு போகப்படுமோ என்னும் பயம் நிரம்பியிருந்த காலத்திலே சீர்திருத்தம்வேண்டும் என்னும் எண்ணம் பாரத மக்களுள் ஒரு சாராருக் குண்டாயிற்று. இதைப் போன்ற மாறுபட்ட பல்லாயிரம் அலே

களின் கடுந்தாக்கல்களையும் இந்தியசமூகம் தாங்கியிருக்கின்றது. கடந்த அவ்வலைகளின் தாக்கல்களோடு ஒப்பிட்டுக் கூறினால் மேனாட்டு நாகரிகமாகிய இது அற்ப பலமுள்ளதாகவே மதிக்கத்தகுந்தது. பல நூற்றாண்டுகளாகப் பேரலைகள் ஒன்றன்மேலொன்றாக எழும்பி நாட்டிலிருந்த ஒவ்வொன்றையும் உடைத்துப் பொடி பண்ணித் தள்ள முயன்றிருக்கின்றன. பட்டாக் கத்திகள் பிரகாசித்தன. 'அல்லாஹு அக்பர்' என்ற குரலின் சத்தம் வானத்தையும் கிழித்துச் சென்றது. எனினும் இந்துக்களின் லக்ஷியங்களை ஒரு சிறிதும்மாறு படுத்த முடியாமலேயே இவ் வெள்ளப் பெருக்கெல்லாம் அடங்கியது.

இந்திய சமூகம் அழிக்க முடியாதது. அழிவின்றியே அதுநிற்கின்றது. ஆத்ம

தத்துவம் அதனது முதுகெலும்பாக இருக்கும் வரையிலும், மக்கள் தமது தெய்விகத் தன்மையைக் கைவிடாத வரையிலும் வருங்காலத்திலும் அழிவின்றியே அது நிற்கக்கூடும். அவர்கள் ஏழைகளாக இருக்கலாம்; பிச்சைக்காரர்களாய் வறுமை நோய்வாய்ப் பட்டும் இருக்கலாம்; அசுத்தமும் ஆபாசமும் அவர்களைச் சூழ்ந்திருக்கலாம்; எனினும் அவர்கள் தங்கள் கடவுளைக் கைவிடாமலிருக்கட்டும். தாங்கள் மஹரிஷிகளின் புத்திரர்கள் என்பதை மறவாதிருக்கட்டும் மேனாட்டிலே வீதியில் திரியும் ஒருவன் கொள்ளைக்காரத்தலைவனது சந்ததியில் வந்தவனென்று சொல்லிக்கொள்ள விரும்புவதுபோல இந்தியாவில் சிங்காதனத்தில் வீற்றிருக்கும் ஒருசக்கரவர்த்தியும்காட்டிலேவசித்து,

மரவுரி தரித்துக் காய்கனிகளைத்தின்று கடவுளுடன் கலந்து பேசிய ஒரேழை முனிவரின் சந்ததியில் வந்தவனென்று சொல்லிக்கொள்வதில் பெருமைகொள்கிறான். இம்மாதிரி சந்ததியையே நாங்கள் விரும்புகிறோம். பரிசுத்தம்—தெய்விகம் என்பன இவ்வளவு சிறப்பாகப் போற்றப்படும் வரையில் இந்தியா அழிவுறாது நிலைத்து நிற்கும்.

மாக்ஸ்முல்லர் என்னும் பெரியார், 'பத்தோன்பதாம் நூற்றாண்டு' என்னும் பெயர் கொண்ட பத்திரிகையின் இதழொன்றிலே 'உண்மை மஹாத்மா' என்று தலையங்கமிட்டு எழுதிய வியாசத்தை உங்களிற் பலர் படித்திருக்கக் கூடும். ஸ்ரீராமகிருஷ்ணருடைய வாழ்க்கையானது, அவர் உபதேசங்களுக்கோர் எடுத்துக்காட்டாக இருப்பதால்

கேட்போருக்கு இன்பம் ஊட்டுகின்றது. எல்லா விஷயங்களிலும் இந்தியாவிற்கு முற்றிலும் மாறுபட்ட மேலே நாட்டில் வசிக்கும் உங்களுக்கு இந்தியர் வாழ்க்கை சிறிது நூதனமாகத் தோன்றலாம்; ஏனெனில் மேனாட்டு வாழ்க்கையில் நிறைந்துள்ள சுறுசுறுப்பான வழிமுறைகளும் ஒழுங்குபாடுகளும் இந்தியாவில் உள்ளதைக் காட்டிலும் முற்றும் மாறுபட்டுள்ளன. உங்களிற் பலர் முன்னமே கேள்விப்பட்ட விஷயங்களில் புதிதாக விளக்கந்தரக்கூடியவை சில இருப்பதனாலே மேலும் கூர்ந்து நோக்கத் தக்கவை உண்டு.

பல திறப்பட்ட சீர்திருத்தங்கள் இந்தியாவில் பரவத் தொடங்கிய காலத்திலே, வங்காள தேசத்திலுள்ள ஒரு தபசி கிராமத்திலே வசித்து வந்த

ஒரேழைப் பார்ப்பனருக்கு 1836-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலே ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தையின் தாயும் தந்தையும் வைதிகப் பற்றுள்ளவர்கள். ஒருண்மை வைதிகப்பிராம்மணருடைய வாழ்க்கை, தியாகம் நிறைந்ததாகும். லௌகிக காரியங்களில் ஏதோ ஒன்றிரண்டே அவரால் புரியக்கூடும். வைதிகப் பார்ப்பனர் லௌகிகங்களில் அதிகமாக ஈடுபடுதல் கூடாது. பிறரிடமிருந்து பரிசு ஏதும்பெறுதல் கூடாது. அவ்வித வாழ்க்கை எவ்வளவு கடுமை பொருந்தியது என்பதை நீங்களே யூகித்துக் கொள்ளலாம். பிராம்மணர்களைப் பற்றியும் புரோகித முறைகளைப் பற்றியும் நீங்கள் நன்குகேள்விப் பட்டிருக்கின்றீர்கள்; எனினும் விசித்திரமான இச்சிறு கூட்டத்தினர் பல்லா

யிரக் கணக்கிலுள்ள தம் தோழர்களை ஆளுவது எங்ஙனம் என்பதைப் பற்றி உங்களுக்குள் சிந்தித்துத் தெரிந்து கொள்பவர்கள் ஒரு சிலரே இருக்கக் கூடும். பார்ப்பனரே ஏனைய வகுப்பாரி னும் பரம ஏழைகள்; எனினும் அவர் கள் பலம் முழுதும் அவர்களது தியாக வாழ்க்கையால் உதித்ததாகும். உலகத் திலேயுள்ள புரோகிதர்களுள் இவர் களே மிக்க வறிஞர்கள். அதனாலேயே சர்வ சக்திவாய்ந்தவர்களாக விளங்கு கின்றனர். இவ்வேழ்மையிலும் ஒரு பார்ப்பினி, உண்ணுவதற்கு யாதும் கொடாமல் பட்டினியுடன் எந்த ஏழை யையும், தன் ஊர்வழியாகச் செல்லவிட மாட்டாள். தனக்குள்ளதைக் கொடுத் தேனும் பசியை ஆற்றித் திருப்தி கொள்வாள். அதுவே அன்னை யொருத்

தியின் உயர்ந்த கடமையென இந்தியா வில் மதிக்கப் படுகின்றது. அவள் தாயாக இருப்பதாலேயே தன்னைக் கடைசியாகக் கவனித்துக்கொள்ள வேண்டியிருக்கின்றது; தன் முறைவரு வதற்கு முன் மற்றவர் எல்லாம் உண வருந்தி விட்டனரா என்று அவள் கவ னித்துப் பார்க்க வேண்டும். ஆகவே இந்தியாவில் தாய் தெய்வமாகக்கொண் டாடப்படுகின்றுள். நாம் எடுத்துக் கொண்ட விஷயத்திலே வரும்படியான மேற் குறித்த மாது ஒருண்மையான தாய்க்கு உதாரணமாக விருந்தார். சாதியின் மேன்மைக்குத் தக்கவாறு கட்டுப்பாடுகளும் அதிக மிருந்தன. மிகக் கீழ்ச்சாதி ஜனங்கள், தாங்கள் விரும்பியபடி எதையும் உண்ணவும் அருந்தவும் கூடும். ஆனல் சமூக அங்

தஸ்தில் மனிதன் உயர்வு அடைவதற்கேற்ப வாழ்க்கையில் மேன்மேலும்கட்டுப்பாடுகளும் அதிகரிக்கின்றன. மிக வுயர்ந்த சாதியாராக—பிராம்மணராக இந்தியாவின் பரம்பரைப் புரோகிதராக—உயர்வடையும்போது அவர்களது வாழ்க்கை பலவழிகளில் கட்டுப்பட்டு விடுகின்றது. மேனாட்டுப் பழக்க வழக்கங்களோடு ஒப்பிட்டு நோக்குமிடத்து அவர்களதுவாழ்க்கை தியாகம் நிறைந்ததாகின்றது. இந்தியர்கள் உலகத்திலுள்ள ஏனைய சமூகத்தினின்றும் முற்றிலும் மாறுபட்டவர்கள் என்று கூறலாம். ஆங்கிலேயரைப் போலவே அவர்களும் செயலாற்றுவதில் உறுதியுடையவர்களே; அவர்கள் உறுதி மிகப் பரந்து மிருக்கின்றது; ஒரு நோக்கத்தைக் கைக்

கொண்டால் முடிவு வரைக்கும் அநு சரித்து அதிலிருந்து ஏதேனும் பய ஞென்றைப் பெறும் வரையில் தலை முறை தலைமுறையாகக் காப்பாற்றி வருகின்றனர். ஒரு கருத்தை அவர்க ளிடத்தில் கொடுத்துவிட்டால் அதைத் திரும்பப் பெறுவது—அதனை மாற்று வது, மிகமிகக் கடினம். அதைப்போ லவே புதிய எண்ணங்களை ஏற்றுக் கொள்ளச் செய்வதும் இயலாததாகும். குறிப்பிட்ட சிற்சில நிபந்தனைகளுக்கு உட்பட்டே அவர்கள் வாழ்க்கையை நடத்தவேண்டி யிருப்பதனுலே, அவ் வைதிக பிராம்மணர்களது வாழ்க்கை முற்றிலும் மாறுபட் டிருக்கின்றது. அவர்களது வாழ்க்கைக்கான நுட்பங் களுடன் கூடிய விதிகளெல்லாம் எங்க ளது பழைய சாஸ்திரங்களிலே மிகவிரி

வாகக் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளில் பொதுவிதிகளைக்கூட விடாது பலமாகக் கைப்பற்றித் தங்கள் வாழ்க்கையில் அனுசரிக்க முயலுவார்கள் அவர்கள். தங்களது சாதியைச் சேர்ந்த ஒருவனல் அன்றிப் பிறரால் சமைக்கப்பட்ட உணவை உண்பதினும் பட்டினி கிடப்பதே உத்தமம் என எண்ணிச் சும்மா இருந்துவிடுவார்கள். இங்ஙனமிருப்பதோடுகூட அவர்கள் ஆழ்ந்த மனேபாவமும் தீவிரசிரத்தையுமுடையவர்கள். தாங்கள் அனுசரிக்கும் வைதிக முறை முற்றிலும் சரியானதென்று உறுதியாக அவர்கள் நம்புவதாலேயே அவ்வளவு தீவிர பக்தியும் தெய்விக வாழ்க்கையின் சக்தியும் அவர்களால் பன்முறையும் வெளித்தோன்றுகின்றன. அவர்கள் விடாப்

பிடியாகக் கைப்பற்றும் வழி முறை யனைத்தும் சரியல்லவென்று நாம் அனை வரும் எண்ணக்கூடும்; ஆனால் அவர் களுக்கோ அவைகளில் ஒவ்வொன்றும் உத்தமமான தென்றே தோன்றுகின் றது. உதாரணமாக, நெருக்கடியான காலங்களில் கூட ஒருவன் தர்ம சிந் தனையுடன் இருக்க வேண்டுமென்று எங்கள் சாஸ்திரங்களிலே எழுதப்பட் டுள்ளது. ஒருவன் பிறருடைய உயி ரைக் காப்பதற்காகப் பட்டினி கிடந்து உயிரை விடுவதும் முறையானசெய்கை யாகும். அப்படியே செய்யவேண்டும் எனவும் இந்துக்களால் கருதப்படுகின் றது. ஒரு பார்ப்பனன் உயிர் போகுங் காலத்திலும் இவ்வுண்மையை வாழ்க் கையில் அனுசரிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றான். தம்மிடம்

இருந்த சிறிது உணவையும் யாசகன் ஒருவனுக்குக் கொடுத்துவிட்டு ஒரு குடும்பம் முழுவதுமே பட்டினிகிடந்து இறந்துவிட்டதாக மகா பாரதத்தில் கூறப்பட்டுள்ளது. சிறந்த அந்தத் தானத்தின் அற்புதமான பழையகதை, இந்திய இலக்கியங்களைக் கற்றவருக்கு ஞாபகமிருக்கலாம். இது மிகைபடக் கூறியதொன்றன்று; ஏனெனில் இன்றும் இந்தியாவிலே இவ்வித சம்பவங்கள் நடைபெற்றே வருகின்றன. என்னுடைய குருநாதரது தாய்தந்தையர் குணமும் பெரும்பாலும் இதை யநுசரித்தே இருந்தது. அவர்கள் பரம ஏழைகள்; என்றாலும், வறிஞர் பலருக்கு உதவி செய்யும் நிமித்தம் எனது குருநாதரது தாயார் பன்முறை பட்டினி கிடந்ததுண்டு. அத்தன்மை

வாய்ந்த இப்பெரியாருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. பிறந்தது முதலே அதன்செயல் விசித்திரமாக இருந்தது. அக்குழந்தை பிறந்தது முதலே பழம் பிறப்புணர்ச்சியுடனிருந்தது. எதற்காகத் தாம் இவ்வுலகில் பிறந்திருக்கின்றாரென்பதையும் அவர் அறிந்திருந்தார். அதை நிறைவேற்றும்பொருட்டு தமது முழு ஆற்றலையும் பயன்படுத்தினார்.

இளவயதிலேயே அவர் தமது தந்தையாரை இழந்துவிட்டார்; எனினும் அச்சிறுவர் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார். ஒரு பார்ப்பனச் சிறுவன் பள்ளிக்கூடம் போக வேண்டியது அவசியம். கல்விகற்று அறிவைப்பெறுவதைத் தவிர அவன் வேறெதிலும் புத்தி செலுத்தக்கூடாதென்று அச்சமூ

கம் அவனைக் கட்டுப்படுத்துகின்றது. நாட்டின் பல பாகங்களில் இன்னும் அனுஷ்டானத்தி லிருந்து வருவதும் சிறப்பாகச் சந்நியாசிகள் சம்பந்தப் பட்டதுமான பழைய காலத்துப் படிப்பு முறையானது, இக்காலத்தைப் பார்க்க முற்றிலும் மாறுபட்டதாக விருக்கின்றது. மாணவர்கள் ஆசிரியர் களுக்குச் சம்பளம் கொடுக்கவேண்டிய தில்லை. அறிவுவளர்ச்சி பெறுதல் தெய் விகம் பொருந்தியதாகக் கருதப்பட்ட மையாலே—அவ்வளவு பரிசுத்தமான தாலே—ஒவ்வொருவனும் அதை விலைக்கு விற்கலாகாதென எண்ணப் பட்டது. அறிவு யாதொரு பயனையும் கருதாமல் இலவசமாகக் கற்பிக்கப் படவேண்டும். ஆசிரியர், சம்பளமின் றியே மாணவர்களுக்குக் கல்வி புகட்டி

வந்தனர். அவர்களுட் பெரும்பான் மையோர் தமது மாணவர்களுக்குஉண வும் உடையும் கொடுத்து ஆதரித்தும் வந்தனர். தனவந்தர்கள் தத்தம் இல் லங்களில் நடைபெறும் விவாக காலங் களிலோ சிராத்தச் சடங்குகளிலோ இவ்வாசிரியர்களைப் பெருங் கொடை களா லாதரித்துவந்தனர். சிற்சில வெகுமதிகளைப் பெற இவர்களே முதல் உரிமையாளர்களாகக் கருதப்பட்டுவந் தனர். இதன் விளைவாக அவர்கள் தன வந்தர் முதலியோர்களது மக்களை ஆத ரித்துக் கல்வி கற்பிப்பதைக் கடனாகக் கொண்டனர். ஆகவே எப்போதாயி னும் ஒரு விவாகம் நடைபெற்றால்,அது ஒரு செல்வவந்தனது இல்லத்திலே நடைபெறின், அங்கு இப் பண்டிதர்க ளெல்லாம் வருவிக்கப்படுவர்; பற்பல

விஷயங்களைப் பற்றித் தர்க்கம் செய்விப்பது வழக்கம். இவ்விதம் கூடிய பண்டிதர்களது கூட்டத்திற்கு இளைஞராகிய என் குருநாதர் ஒருமுறை சென்றிருந்தார். ஆங்கு இவ்விளவலது வயதுக்கு எட்டக் கூடாதனவான தர்க்க சாஸ்திரம் வான சாஸ்திரம் முதலிய அரிய விஷயங்களைப் பற்றி வாதம் செய்யப்பட்டது. முன்னரே யான் கூறியாங்கு, இவர் விசித்திரச் சிறுவராகையாலே, அவர்கள் கற்றுணர்ந்த அறிவினலாய பயன் இதுவாயிருக்கலாமென அறிந்து கொண்டார். ஏன் அவ்வளவு கடுமையாக அவர்கள் தர்க்கம் செய்கின்றனர்? ஏனெனில் காசுக்காகவே! எவனொருவன் மற்றவர்களினும் கல்வித் திறம் வாய்ந்தவனாக இங்குக் காண்பிக்கக் கூடுமோ அவனுக்கு

ஒரு ஜோடி வேஷ்டி கிடைக்கும். அவ்வளவே! இதற்காகத்தான் இவர்கள் இவ்வளவு கடுமையாகத் தர்க்கம்செய்கின்றனர். இவ்வற்ப லாபத்திற்காகப் போரிடும்படி செய்யும் கல்வி கற்க இனி ஒருபோதும் பள்ளிக்குப்போகேன் என்று தீர்மானித்தார். அப்படியே அவர் பள்ளிக்குச் செல்வதை நிறுத்திவிட்டார். அதுவே அவரது பள்ளிக்கூடப் படிப்பின் முடிவாகும். ஆனால், கல்வியிற்சிறந்த ஒரு தமையன் இவருக்கு இருந்தார். தம்மிடமேனும் படிக்கட்டுமென்று கல்கத்தாவிற்கு அவர் இவரை அழைத்துச் சென்றார். ஆனால் கல்கத்தாசென்ற சொற்பநாட்களுக்குள்ளே லௌகிகக்கல்வியின் குறிக்கோள் அனைத்தும் சடப்பொருள் சம்பந்தப்பட்ட அபிவிருத்திக்கு உரியதே

யன்றிப் பிறிதில்லை யென்பதை நன்குணர்ந்து கொண்டபடியால், இச் சிறுவர் கற்பதை அறவே விட்டொழித்து ஆத்ம ஞான அறிவை யடைவதிலேயே தம்மை முற்றிலும் ஈடுபடுத்திக்கொள்ள உறுதி செய்துகொண்டனர். தந்தையார் இறந்த பிறகு குடும்பம் மிக்க வறுமை நிலையுற்றிருந்தது. ஆதலால் இவர் தாமே சம்பாதித்து வாழ்க்கையை நடத்த நேர்ந்தது. கல்கத்தாவிற்கருகேயுள்ள தக்ஷிணேசுவரம் என்னும் ஓரிடத்திற்குச் சென்று கோயில் அருச்சகர் தொழிலில் அமர்ந்தார். ஒரு பிராம்மணன் கோயிற் குருக்களாகவருவது இழிதொழிலாகக் கருதப்பட்டது. எங்கள் கோயில்கள் உங்கள் நாட்டிலுள்ள சர்ச்சுகள்போன்றவையல்ல. நீங்கள் கருதுகின்றபடி அவை தொழுகைக்

கான பொது இடங்களாகமாட்டா. உண்மையைக் கூறுமிடத்து, பொதுத் தொழுகை யென்பதே இந்தியா வில் இல்லை. பெருஞ் செல்வராலே தங்கள் மதப்பற்றின் சிறந்த அறிகுறி யாகவே கோயில்கள் கட்டப்படுகின் றன.

அதிகச் சொத்துடையவனாக ஒரு வன் இருந்தால் ஒரு கோயில் கட்ட விரும்புகிறான். அதில் கடவுளை ஞாப கப்படுத்தும் ஓர் அடையாளத்தையோ அன்றிக் கடவுளவதாரத்தின் உருவ மொன்றையோ ஸ்தாபனம்செய்து, கட வுளின் பேரினாலே பூசை செய்வதற்கு அதை அர்ப்பணம் செய்துவிடுவான். இக்கோயில்களில் நடைபெறும் பூசனை யானது ரோமன் கத்தோலிக்கரதுமாதா கோவில்களில் நடக்கும் பூசையைப்

பெரும்பாலும் ஒத்திருக்கும். மாதா கோவில்களில் நடைபெறும் 'மாஸ்' போலவே ஆங்கு வேதபாராயணங்கள் நடைபெறும். விக்கிரஹத்தின் முன்னர்த் தீபாராதனைகள் செய்யப்படும். நாம் ஒரு பெரியாரைக் கௌரவிப்பது போல் அவ்விக்கிரகத்தையும் மேன்மைப் படுத்துவார்கள். கோவிலில் நடைபெறுவன இவ்வளவே. கோயிலுக்குச் செல்லும் ஒரு மனிதன் ஒருபோதும் கோவிலுக் கேகாதவனிலும் பெரியவன்என்றுகருதப்படுகின்றதில்லை. இந்தியாவிலே மதமானது ஒவ்வொருவனது தனிப்பட்டவிஷயமாகக் கருதப்படுகிறதனால் கோவிலுக்கேகாதவனே உண்மையில் பக்தி மிக வாய்ந்தவனென மதிக்கப் படுகின்றான். ஒவ்வொருவனும் தன் தன்இல்லத்திற் சிறு

கோவில் ஒன்றையோ அதற்கென ஓர் அறையையோ ஏற்படுத்தி ஒவ்வொரு காலைமாலையும் அதனுள் ஒரு மூலையில் அமர்ந்து பூசை செய்துவருகின்றான். இது முற்றிலும் மானச பூசையாகும். ஏனெனில் பிறருக்கு அவன் என்ன செய்கிறான் என்பது தெரிகின்றதில்லை. யாதொன்றும் செவியிற் படாது. அங்கு உட்கார்ந்துகொண்டு கைவிரல்களை ஒருவிதமாக அசைத்துக் கொண்டோ நாசித் துவாரங்களை மூடியும் திறந்தும் விபரீத முறையிலே மூச்சு விட்டுக்கொண்டோ இருப்பதாக மாத்திரம் மற்றவர் கண்களுக்குப் புலப்படும். அவனது சகோதரனாயிருப்பினும் இதற்குமேல் ஒன்றும் தெரிந்து கொள்ள இயலாது. ஒவ்வொரு வேளை அவனது மனைவியும் அவன் செய்வ

தென்னவென்பதை அறியாமலிருக்கலாம். இவ்விதம் எல்லா வழிபாடுகளையும் ஒவ்வொருவனும் தனது இல்லத்திலே ஏகாந்தமாக இருந்து செய்து வருகின்றான். தங்களது வீடுகளில் அதற்கென அறையொன்றை அமைத்துக்கொள்ள இயலாதவர்கள் நதிதீரங்கள் அல்லது ஏரி அல்லது கடலுக்கருகில் வசித்தால் சமுத்திரக்கரை இவைகளில் ஒன்றிற்குப் போய்த் தெய்வத்தை வழிபட்டு வருவார்கள். சிற்சில சமயங்களில் கோவில்களுக்குப் போய் விக்கிரகங்களைக் கும்பிடுவதும் உண்டு. கோவில்களுக்கு அவர்கள் செய்யவேண்டிய கடமை அவ்வளவோடு முடிந்துவிடும். ஆகவே, எங்கள் தேசத்தில் மிகப் புராதன காலமுதல் மனு முதலிய ஸ்மிருதிகளின் விதிப்படி

யும் கோயில் குருக்களாக அமருவது இழி தொழிலெனக் கருதப்பட்டு வந்ததன் காரணம் உங்களுக்குஇப்பொழுது புலப்பட்டிருக்கலாம். இவ்வளவு தாழ்ந்த தொழிலை ஏற்றுக்கொண்ட ஒரு பிராம்மணன் நிந்திக்கத் தகுந்தவனாகிறான் என்று சில சாஸ்திரங்களும் முறையிடுகின்றன. இந்நிபந்தனைக்குக் காரணம் வேறொன்றும் உண்டு. தெய்விக விஷயங்களை வியாபாரச் சரக்குகளாக மாற்றிவிடுகின்றதனாலே, மத சம்பந்தமான காரியங்களைச் செய்வதற்குச் சம்பளம் பெறுவதென்பது, கல்வி கற்பிப்பதற்குக் காசு வாங்குவதினும் அதி பலமாக ஆக்ஷேபம் செய்யப்பட்டு வருகின்றது. ஆகவே ஏழ்மைத் தனத்தால் உந்தப்பட்டு யாதும் வழிகாண மாட்டாதவரே கடைசியாகக் கைக்

கொள்வதான கோயிற் குருக்கள் தொழில் ஒன்றை ஏற்றுக்கொள்ள நேர்ந்தபோது அச்சிறுவர் எவ்வளவு மன வேதனை யடைந்திருப்பா ரென்பதை நீங்களே யூகித்துக்கொள்ளலாம்.

வங்காள தேசத்திலுள்ள கவிகள், பலருடைய கவிகள், சாதாரண மக்களிடையே பிரபலமாகப் பரவி, அவைகள் கல்கத்தா நகரின் கடைத் தெருக்களிலும் ஒவ்வொரு ஊர்களிலும் பாடப்பட்டு வருகின்றன. இவைகளில் அநேகம் பக்தி சுவை வாய்ந்த பாடல்களாம். இப்பாடல்களின் உட்கருத்து, பெரும்பாலும் இந்தியாவிற்கே உரித்தாகும் என்று சொல்லப்படும் கடவுள் சாக்ஷாத்காரமே. இவ்வுட்கருத்தைக் கொள்ளாத மத நூல் இல்லவே இல்லை. ஒருவன் கடவுளைச்

சாக்ஷாத்கரிக்கவேண்டும்; கடவுளை உணரவேண்டும்; அவரைக் காண வேண்டும்; அவருடன் பேசவும் வேண்டும்; இதுவே மத மெனப் படும். கடவுள் காட்சிகளைக் கண்ட புனிதமகான்களின் சரித்திரங்கள் இந்தியா வெங்கணும் நிறைந்துள் ளன. இவ்வித கருத்துக்களே (கட வுளை அனுபூதி வாயிலாய் அடைவதே) அவர்களது மதத்தின் ஆதார நிலைய மாக விருக்கின்றன. பழைய காலத் துப் புத்தகங்களும் சாஸ்திரங்களும் ஆத்மஞான உண்மைகளை நேருக்கு நேர் கண்ட பெரியார்களால் எழுதப் பட்டவைகளாகும். இப் புத்தகங்கள் புத்திமான்களுக்காக எழுதப்பட்டன வல்ல. ஆராய்ச்சி மூலமாகவும் இவற் றைத் தெரிந்துகொள்ள முடியாது.

உண்மையை நேரில் கண்ட பெரியார் களால் எழுதப்பட்டதனுலே தம்மை யும் அப்பெரியார்களது நிலைமைக்குத் தகுந்தவாறு உயர்த்திக் சொள்ளுபவர் களால் மட்டில் அவைகளைத் தெரிந்து கொள்ளமுடியும். இப் பிறப்பிலே கட வுள் சாக்ஷாத்காரம் அடையக்கூடும் என்றும், அஃது அனைவராலும் அடை யக்கூடிய தென்றும் அவைகள் கூறு கின்றன. இவ்வித நிலையை அடைவ தற்கு மனம் திரும்புவதையே நான் மதத்தின் தொடக்கமென்று சொல்லு வேன். இதுவே எல்லா மதங்களி னுடையவும் முக்கியக்கருத்து. ஆகவே பேசுவதில் திறமை வாய்ந்த ஒருவனே அன்றி வாதம் புரிந்து யாவரும் நம்பு மாறு உண்மையை விளக்குவதில் வல்ல ஒருவனே சமயத் தொடர்பான மிக

உயர்ந்த கருத்துக்களைப்பற்றி உபதேசம் செய்யும்போது செவி சாய்த்துக் கேட்பார் ஒருவரும் இல்லாமற் போய்விடுகின்றனர்.

ஆனால் மற்றொரு மனிதர், பரம ஏழை; தமது தாய்பாஷையிலும் சரிவரப் பேசத் தெரியாதவர்; எனினும் அவரது ஜீவிய காலத்திலேயே சமூகத்தில் பாதிப்பேர் அவரைக்கடவுளெனக் கும்பிட்டு வருகின்றனர். ஒருவன், தன்னை அனுபூதி யென்னும் உயர் நிலைக்கு உயர்த்திக்கொண்டான் என்றால் மதமானது அவனுக்கு வெறும் மனோபாவனையுடன் நின்றுவிடுவதில்லை; சமயம், ஆத்மாவின் அழியாத்தன்மை, கடவுள் என்னும் மிக உயரிய உண்மைகளை ஒருவன் வறிதே இருட்டிலே தேடிக்கொண்டிருக்கவில்லை என்பது

வெளிவந்து விட்டால், அத்தகை யோனைப் பார்ப்பதற்காக இந்தியா விலே நாலா பக்கங்களிலுமிருந்து மக் கள் திரண்டு வருகின்றனர். காலக் கிரமத்தில் அவனைக் கடவுளெனவே கருதி வணங்கத் தலைப்படுகின்றனர்.

மேற்கூறிய சிறுவர் பூசைசெய்ய அமர்ந்த கோவிலிலே ஆனந்த உரு வினளாகிய ஜகதம்பிகையின் விக்ரகம் ஒன்று ஆராதனை செய்யப்பட்டு வந் தது. இவர் வழக்கம்போல் காலை மாலைகள் தோறும் பூசனையாற்றி வரு கிற காலத்திலே இவ்வித எண்ணங்கள் நாளடைவில் அவர் மனத்தில் குடி கொண்டன: “இவ் விக்கிரகத்தில் ஏதேனும் உண்மை இருக்கின்றதோ? ஆநந்தமயியாகிய தேவி இருப்பது உண்மைதானோ? உண்மையிலே அவள்

இருந்து இந்த உலகத்தை நடத்துகின்றுள் என்பது நிச்சயந்தானே? இவை எல்லாம் கனவு மாத்திரமேயோ? மதம் என்பதில் உண்மை யேதேனும் இருக்கின்றதா?'' இத்தகைய சந்தேகங்கள் இந்துக்களின் குழந்தைகளுக்கு எழுவதுண்டு. நாம் செய்வன வெல்லாம் உண்மைதானே என்னும் ஐயந் தோன்றித் தெளிதல் இந்தியா தேசத்திற்கே உரித்தானதாகும். கடவுள், ஆன்மா இவைகளைப் பற்றிய எல்லையற்ற தத்துவங்கள் எப்போதும் எங்கள் நூல்களில் இருந்தபோதிலும் இவை யொன்றுலும் நாங்கள் திருப்தியடைவதில்லை. தத்துவங்களோ சாஸ்திரங்களோ எவையும் எங்களைத் திருப்தி கொள்ளச் செய்யா. ஆன்ம சாக்ஷாத்காரம் அல்லது அனுபூதி என்னும்

ஒன்றே எங்கள் ஆயிரக் கணக்கான ஏழைகளது மனத்தையும் கவருவதாக வுளது. கடவுள் இருக்கிறார் என்பது உண்மையா? உண்மையில் இருக்கிறார் என்றால் என்னால் அவரைக் காண இயலுமா? உண்மையை நான் சாக்ஷாத் கரிக்க முடியுமா? இவை எல்லாம் மேலைத் தேசத்தவர் மனதுக்கு அசாதாரணமாகத் தோன்றலாம்; ஆனால் எங்களுக்கோ இவை யாவும் அனுபவத்திலடையக்கூடிய உண்மைகளாகும். இவ்வுண்மைகளுக்காக — இவைகளைப் பெறுவதற்காக — எங்கள் நாட்டவர் உயிரையும் துறந்துவிடுவார்கள். இது சாதாரணமாகத் தெரிந்துகொள்ளுதல் என்னும் வார்த்தையின்பாற் படாதது; அறிவின் அநுமானமாகாதது; வெறும் தர்க்கத்தின் வாயிலாக அடை

யப்பெறும் முடிபல்லாதது; இருட்டில் தேடப்படாதது; ஆனால் உண்மையில் சாக்ஷாத்கரித்தறியப்படுவது. புலன்களுக்கு இப்புறவுலகு உண்மையாய்த் தோன்றுவதைக் காட்டினும் பன்மடங்கு பிரத்யக்ஷமாய் இருப்பது. இவ்வுண்மையை அனுபவிப்பதற்காகப் பண்டைக்கால முதலே குகைகளில் வசிப்பதற்கு எத்தனை மாந்தர் இன்ப சுகத்தையும் பெருமித வாழ்வையும் துறந்து சென்றனர்! எத்தனை ஆயிரக்கணக்கான அரசர் முதலியோர் புண்ணிய நதிக் கரையிலே உட்கார்ந்து கண்ணீர் சொரிவதன் பொருட்டு வீடு வாசலை விட்டுச் சென்றுளார்! இவைகளெல்லாம் நீங்கள் அறியாதனவல்ல. இவ்வித சாக்ஷாத்காரத்திற்காகவே அவர்கள் எத்தனைத் துன்பங்களுக்கும்

ஆளாகின்றனர். அவர்களது வாழ்க்கைக்கும் அவர்களது துன்பக் கண்ணீருக்கும் காரணங்களை இப்போது உங்கள்முன் எடுத்துரைக்க இது சமயமன்று. இவ்வொரே விஷயம் அப்பெரியாரது உள்ளத்தில் ஊன்றிப் பதிந்துள்ளது என்பது மாத்திரம் உண்மையாகும். ஆயிரக் கணக்கானோர் கொல்லப்படுவர்; எனினும் ஆயிரக் கணக்கான மாந்தர் உயிரை விடுவதற்கும் சித்தமாயிருப்பர். இந்த ஒன்றைப் பெறும் பொருட்டே பல்லாயிரக் கணக்கான வருஷங்களாக இந்த சமூகத்தார் அனைவரும் தங்கள் வாழ்க்கையை வெறுத்துத் தியாகம் செய்து வருகின்றனர். இதன் நிமித்தம் ஒவ்வொரு ஆண்டிலும் ஆயிரக்கணக்கான இந்து மக்கள் தங்கள் வீடுவாசல்களைத்

துறந்துவிடுகின்றூர்கள். இன்னும் எண்ணிறந்தோர் குடும்பத்திலுண்டாகும் துன்பங்களைப் பொறுக்க முடியாமல் இறந்தும் வருகின்றனர். மேனுட்டவனுக்குஇவையனைத்தும் கனவுபோலத் தோன்றலாம். இவ்வித நோக்கத்தின் காரணமும் நான் அறிந்ததொன்றே. ஆனுல் நான் மேலைத்தேசத்தில் வசித்துள்ளேன் என்ருலும் இவ்விஷயம்உண்மையில் அனுபவவாயிலாக அடையக்கூடியதெனவே இன்றும் நான் கருதுகின்றேன்.

கடவுளைச் சாக்ஷாத்கரிக்க வேண்டுவதைத் தவிர்த்து ஏதேனும் ஒருகணப்போழ்தாகிலும் நான் வேறெண்ணம் கொள்வேனுகில் அக்காலம் எனக்குப் பெரு நஷ்டத்தை விளைவிக்கும். ஆச்சரியமான பௌதிக சாஸ்திரத்திற்

சிறிது கருத்தூன்றுவேனுகில் அதுவும் பயனற்றதே. வாழ்வோ நீரிற் குமிழி போன்று அழிதற்பாலது. மக்கள் தேவர்களைப் போன்ற நுண்ணறிவு படைத்தவரா யிருப்பினும் விலங்கு களையொப்ப அறிவற்றவரா யிருப்பி னும் எல்லாம் அழிவதுண்மை. உடுக்க உடையில்லாத அளவு வறுமையுற்றிருந் தாலும், ஈடுமெடுப்பு மில்லாத ஐசுவரி யம் படைத்தவராயிருப்பினும் மாள் வது திண்ணம். மேனுட்டுப் பெரிய நகரங்களின் விசாலமான தெருக்களு ளொன்றில் அற்பனுய் வாழ்ந்தாலும், கோடிக்கணக்கான மாந்தரையாளும் முடிதரித்த கோமானுயிருந்து வாழ்ந் தாலும் முடிவில் மரணம் நிச்சயமே. ஆரோக்கியம் நிறைந்தவராய் இருப் பினும், மிகவும் கேடான நிலையில்

இருப்பினும் உடலழிவு நிச்சயம். மிக்க அன்பு வாய்ந்தவனுயிருப்பினும், குரூரத்தன்மை நிறைந்தவனுயிருப்பினும் அழிவது உண்மை. எனினும் இம்மயக்கத்திலிருந்து விடுபடும் வழி உளதென்று ஹிந்துக்கள் கூறுகின்றனர். அதுதான் கடவுள்; அதுவே மதம் என்பதாம். இஃது உண்மையானுல் வாழ்க்கையின் உண்மை விளக்கப்பட்டதாகின்றது. வாழ்க்கை, வாழக்கூடியதாகவும் அனுபவிக்கக் கூடியதாகவும் ஆகின்றது; இல்லையெனில், அது துன்பஞ் செறிந்த சுமையாய் விடும். இதுவே எங்கள் கருத்து. மற்றப்படி எத்தனை பெரிய தர்க்கமும் அதனை மெய்ப்பித்துக் காட்ட மாட்டாது. தர்க்கங்களெல்லாம் ஒருண்மையை நம்பத்தக்கதென எடுத்துக்

காட்டுவதோடு நின்றுவிடுகின்றன. ஒரு துறையிலிருக்கும் சிறந்த ஆராய்ச்சியின் பயனும் ஒருண்மையை அனுமானிக்கச் செய்கின்றதேயன்றி அதற்கு மேல் எதையும் செய்வதில்லை. மிக உயர்ந்த பௌதிக சாஸ்திர விளக்கமெல்லாம் அனுமானங்களாக இருக்கின்றனவேயன்றி உண்மையை இன்னும் கண்டவையல்ல. இந்திரியங்களால் அனுபவ வழியில் உணரக்கூடியவைகளே உண்மைகளாகும். உண்மைகளின் இருப்பை உள்ளத்தினுல் அறிய வேண்டும். மதத்தை மெய்ப்பித்துக் காட்டுவதின் நிமித்தம் அதை நாம் காட்சியில் உணரக் கூடியவர்களாக இருக்கின்றோம். கடவுள் ஒருவர் உளரென்பதை மனமாற நம்புவதன் பொருட்டு நாம் அவரது இருப்பை

உணர்கிறோம். மத உண்மைகள் உள வென்பதை நம்புவதற்காக நாம் மதத்தை உணர்வது அவசியமாகின்றது. அதனை உணர்வது மிகவும் நீண்ட தர்க்கங்களாலோ வேறெவற்றினாலோ அல்ல; ஆனால் நம் மனஉணர்ச்சியே இவ்விஷயங்களை மெய்பித்துக் காட்டும்; என் நம்பிக்கையைக் கற்பாறைபோல் அசைக்க முடியா உறுதியுடையதாக்கும்

கடவுளைக் காணவேண்டுமென்னும் இந்த எண்ணம், மேலே சொன்ன சிறுவரையும் பற்றிக்கொண்டதனால் அவரது முழு ஆற்றலும் ஒருங்கு குவிந்து அதில் ஈடுபட்டது. ஒவ்வொரு நாளும் அவர் விம்மி யழுது "அன்னாய்! நீ இருப்பது உண்மைதானா? கவிவாணரது கட்டுக்கதைதானா? வெறுங்கனவு

மாத்திரமேயோ? உண்மையில் மெய்ப் பொருள் என்பதொன்று உண்டு கொல்?'' என்று ஏங்கிப் பரிதவிப்பார். கல்வியென்றும் கலைகளென்றும் நாம் எவற்றைக் கருதுகின்றேமோ அவை ஒன்றையும் இச் சிறுவர் அறிந்தில ரென்பது நாம் முன்னரே அறிந்த உண்மை. ஆகவே அவர் எவ்வளவு இயற்கைக் குணம் வாய்க்கப் பெற்ற வராகவும், எவ்வளவு திட மனமுடைய வராகவும், அயலார் கருத்துக்களேதும் கலவாத அவ்வளவு பரிசுத்த எண்ணங் கள் உள்ளவராகவும் இருந்தார்! கலா சாலைக்குச் சென்று கல்வி பயிலாத தால் அவர் தாமாகவே சிந்தனை செய் யும் சக்தி வாய்க்கப் பெற்றிருந்தார். நமது வாழ்க்கையில் அரைவாசி, கலா சாலைகளில் கழிக்கப்படுவதாலே பிறர்

கருத்துக்களைத் திணிக்கப் பெற்றவ ராக நாம் இருக்கின்றோம். சற்று முன் குறிப்பிட்ட மாக்ஸ்முல்லர் எழுதிய கட்டுரையிலே "அவர் ஒரு பரிசுத்த மான சுய அறிவு வாய்க்கப்பெற்றவர்; எந்தச் சர்வ கலாசாலையின் எல்லைக் குள்ளும் கல்வி பயிலாததே அவர் சுய அறிவு வாய்க்கப் பெற்றதன் ரகசிய மாகும்" என்று வெகு அழகாக எடுத் துக்காட்டப்பட்டிருக்கிறது. என்றாகி லும் கடவுளைக் காணக்கூடுமா என்று அவரது உள்ளத்தை மிக உறுதியாய்ப் பற்றியிருந்த அவா நாளுக்கு நாள் வலிமை பெற்று இறுதியில் கடவுளைத் தவிர்த்து வேறொன்றையும் கருதாதபடி செய்துவிட்டது. ஆகவே பூசையை முறைப்படி செய்துவர அவரால் முடிய வில்லை; பன்முறை தேவி விக்கிரகத்

தின் முன்னர் நைவேத்தியம் படைக்க மறந்துவிடுவார். சிலவேளைகளில் தீபாராதனை செய்யத் தவறி விடுவார். வேறு சில நேரங்களில் மற்றயவற்றை மறந்து மணிக் கணக்காகத் திருவிளக் காரத்தியைத் தேவியின் திருமுன்னர்ச் சுற்றிக்கொண்டிருப்பார்.

தாயே! நீ இருப்பது உண்மைதானு? உண்மையாயின் நீயேன் வந்து என்னுடன் பேசுகின்றுயில்லை? நீ இறந்து பட்டனையோ? என்றிந்த எண்ணமே அவர் மனத்தில் அனவரதமும் குடிகொண்டது. சிலசமயம், நம்மிற் சிலருக்கும், பயனற்ற—உயிரற்ற தர்க்கங்களாலும் உண்மைப் பயனென்றையும் தராதபுத்தகப்படிப்பாலும் சலிப்படைந்து அறிவு ஆவேசங்கொண்ட வேளைகளில் இத்தகைய கடவுட்சிந்தை உண்

டாவதுண்டு. (அபினி உண்பவனது அகக்களிப்பு — போதை — ஒருவகை ஊக்கந் தருகிறது. பழக்கமானகுறித்த காலத்தில் அபினி கிடையாவிடின் அவன் இறந்துவிடுவான். இதுபோன்ற அறிவுவெறியும் நமக்குஅவசியந்தான்.) கடவுட் சிந்தை யுண்டாகும்போது நாமும் 'பரந்த இவ்வுலகத்திலே உண்மையறிவை எனக்குப் புலனுக்குவாரொருவரும் இலரோ? மாறுபாடும் சச்சரவுகளும் மிகுந்த இவ்வுலகத்தில், நான் யாரை உண்மையாக நம்பிப் பின்பற்றுவேன்! கடவுளே! நீ யிருப்பது உண்மையாயின், நேரே வந்து என்னோடு பேசலாகாதா? ஆண் பெண் என்ற வேறுபாடின்றி அனைவர்க்கும் உரிய கடவுள் நீயேயாயின், நீ நேரில் வாராமல் உன் தூதர்களை அனுப்புவது

முறையோ? நேரில் வந்து, உன் குழந்தை பக்குவ முடையவனு இல்லையா என்பதை அறிவிக்கக்கூடாதா? இல்லையாயின் பக்குவி யாக்கக் கூடாதா?' என்று கரைவோம். அலுத்துச் சலித்து ஆழ்ந்த சிந்தையினின்று இத்தகைய உணர்ச்சி யெழும்போது ஒருகணம் நம்முன் துறக்கத்தின் கதவு திறந்து விட்டது போலத் தோன்றும். நாம் பேரானந்தப் பேரொளியில் மூழ்குவதாகக் காண்போம். ஆனல் சுற்றிலும் நம்மைத் தூண்டும் சூழல்களின் வன்மையாலும், நமக்குள்ளிருக்கும் மிருகத் தன்மையாலும் மறுகணத்தில் இவற்றை மறந்து விடுகிறோம்.

திரும்பவும் மிருகத் தன்மையாகிய கீழ்நிலைமையை அடைந்து, குடிப்பதும்

உண்பதும் இறப்பதுமாகிப் பெயர்த்தும் செத்தும் பிறப்பதே தொழிலாகி அழிந்து படுகின்றோம். எனினும் அவ்வளவு சுலபமாகத் தம் குறிக்கோளினின்றும் கீழிறங்காமல், மெய்ப்பொருளை ஒருமுறை நாடத் தொடங்கி விட்டால் இடையில்எத்தகையசோதனைகள் இடர்ப்படுத்தினும், மரணமுறுவது நிச்சயமாதலால், அதற்குமுன் அவ்வுண்மையை அடைவதின்றி ஒரு சிறிதும் லக்ஷியத்திலிருந்து வழுவாத அபூர்வ மனோபலம் வாய்ந்தவர்கள் நம்மில் இல்லாமற் போகவில்லை. என்றைக்கேனும் இறந்துபட வேண்டிய உயிர் ஒருயர்ந்த காரிய சித்தியின் பொருட்டுப் போகட்டுமே; விலங்கியல்புள்ள மனிதனை வெல்வதினும்—இவ்வாழ்க்கையின் பிறப்பிறப்புகளையும் நன்மை

தீமைகளையும் வென்று நீக்குவது உயரிய வெற்றியன்றோ?

கடைசியில் இச்சிறுவர்க்குக் கோயிற் பூஜை செய்யவே முற்றிலும் இயலாது போயிற்று. அவர் கோயிலையும் அதன் வேலையையும் விட்டகன்று அருகிலிருந்த சிறியதொரு அடவிக்குட் சென்று ஆங்கு வசிக்கலானார். இச்சமயத்தில் எப்போது சூரியன் உதயமானான், எப்பொழுது அஸ்தமனமானான் என்பதும், தாம் எப்படி வசித்தாரென்பதும் அவருக்குத் தெரியாது போயிற்றென்று பிற்காலத்தில் பன்முறை அவர் என்னிடம் கூறியிருக்கின்றார். அவர்க்குத் தம்மைப் பற்றிய எண்ணமில்லாமல் சாப்பாட்டை மறந்துவிடுவார். இந்நாட்களிலெல்லாம் அவரது உறவின் முறை

யார் ஒருவர், மிக்க அன்புடன் இவரைப் பராமரித்து வாயில் உணவை வைத்துத் திணிப்பார். அதை இவரும் தமக்குத் தெரியாமலே அருந்தி வரலாயினர்.

இராப் பகலாக இவ்வண்ணமே இச் சிறுவருக்குக் காலம் சென்றது. ஒரு நாள் முழுதும் கழிந்து மாலை நேரத்தில் கோவிலிலே நடைபெறும் பூசை மணியின் சத்தமும், அதுபோது மக்களால் பாடப்படும் பாட்டுக்களின் குரலோசையும் அவ்வடவியில் இருக்கும் நமது சிறுவர் காதில் படும்போது மேன்மேலும் அவரைத் துன்பக்கடலில் மூழ்கச்செய்யும். அப்பொழுது அவர், "மற்றொருநாளும் வீணிற்கழிந்து விட்டதே. ஆனால், அன்னாய்! நீ இன்னும் என்முன்வந்து எனக்குத் தரிசனம்

தந்தருளவில்லையே. இவ்வற்ப வாழ்க்கையில் மற்றுமொரு நாள் போய் விட்டது; நானோ இன்னும் மெய்ப்பொருளைக் கண்டபாடில்லை" என்று ஏங்கி அழுவார். தேவிதரிசனம் கிடைக்கவில்லையென்னும் தாங்கமுடியாத இம் மனோவேதனையால் தமது முகத்தைப் பலமுறை பூமியில் மோதிப் புலம்பியும் வாய் விட்டலறியும் பின்வருமாறு தேவியைப் பிரார்த்தனை செய்வார். "அம்பிகே! என் ஆருயிர் அன்னையே! என்னுள்ளிருக்கும் ஆத்மசக்தியை வெளிப்படுத்துவாயாக. உலக மாதாவாகிய உன்னையன்றி வேறொன்றையும் நான் விரும்பாமலிருக்கும்படி செய்வாயாக."

உண்மையில் அவர் தமது லக்ஷியத்திற்கேற்ப நடக்கலாயினர். அனைத்தையும் அவள் பொருட்டு அர்ப்பணம்

செய்தாலன்றி ஜகன்மாதா தரிசனம் தருவதில்லையென்பதை அவர் கேள்விப் பட்டிருந்தார். அம்பிகை அனைவரிட மும் வர விரும்புகின்றாள் ; ஆனால் மாந் தரோ அவளை இலக்ஷியம் செய்யாமல், மூடத்தனமாகப் பற்பல அற்பவஸ்துக் களுக்காகப் பிரார்த்தனை புரிகின்றனர் எனவும், அவர்கள் தங்களுடைய சிற் றின்பங்களையே தேடி அலைகின்றார் களே அல்லாது அன்னையை அடைய விரும்புகின்றதில்லையெனவும், உண்மை யில் வேறு எண்ணம் சிறிதுமில்லாமல் முழு மனத்துடன் விரும்புவார்களாகில் அக்கணமே தேவியாரும் அவர்களுக்கு அருள்புரிவார் எனவும் அவர் கேள் விப்பட்டிருந்தார். அவர் தமது அந்த எண்ணமயமாகவே ஆகித் தேவியை யன்றி வேறொன்றையும் வேண்டாத

எண்ணமயமாகி அதனைச் சடவுலக வாழ்க்கையிலும் தவருது அநுசரிக்க முயன்ருர். மனே வாக்குக் காயங்கள் மூன்றிலும் அவ்வெண்ணத்தைப் பின் பற்றி வந்தார். தம்மிடமிருந்த சிறிது சொத்தையும் தூர எறிந்துவிட்டு, இனிக் காசை ஒருபோதும் கையினுல் தொடுவதில்லை என்று விரதம் கொண்டார். காசைக் கையில் தொடுவதில்லை என்னும் இச்சபதம் இவரது வாழ்க்கையில் இயற்கையாக அமைந்துவிட்டது. உங்களுக்கு இது ஓர் ஜாலவித்தையாகத் தோன்றலாம். ஆனல் அவரது பிற்கால வாழ்க்கையில், அவர் உறங்கிக் கொண்டிருக்கும்போதும் ஒரு காசு கைக் கொண்டு அவரைத் தொடவேனுகில் அவரது கைகால்கள் வளைந்துபோம். சரீரமுழுதுமே பாரிச வாயு தாக்கிஞற்

போன்று உணர்ச்சியற்றுப் போய் விடும். அவர் மனத்திலெழுந்த மற் ெறாரு விஷயமென்ன வென்றால் காமம் ஒருபெரும் பகையாகும்என்பதே.மனி தன் ஆத்மாவாவன்;ஆத்மாவோ, ஆண் பெண் என்ற பால் வேற்றுமையற்றது. ஆண்பெண் என்ற வேற்றுமையும், ஐசு வரியமுமாகிய இரண்டு எண்ணங்களும் தேவியைத் தரிசிப்பதினின்றும் தடுக் கின்றனவென அவர் கருதினார். இச் சராசரம் முழுதும் ஜகதம்பிகையின் வெளித் தோற்றமே. அம்பிகை ஒவ் வொரு பெண்ணின் உடலிலும் வாசம் செய்கின்றனள். "ஒவ்வொரு பெண் ணும் ஜகதம்பிகையின் அம்சமாக விருக்க, ஒரு மாதை நான் எப்படி மனைவியாக எண்ணுதல் கூடும்?" இதுவே இவருடைய கொள்கை. ஒவ்

வொரு மாதரும் பராசக்தியாகவே அவருக்கு விளங்கினர். பெண்ணுரு ஒவ்வொன்றிலும் தேவியைத் தவிர்த்துப் பிறிதொன்றும் காணக்கூடாத நிலையைஇவர் அடைந்தார். இவர் இக் கொள்கையை வாழ்க்கை முற்றிலும் அநுசரித்து வந்தார்.

மனித வர்க்கத்தைப் பற்றிக்கொள்ளும் மகா பலம் பொருந்தியதாகும் இது : "குழந்தாய்! ஓரறையில் பொற்குவியல் ஒன்றும் அதற்கடுத்த மற்றோர் அறையில் ஒரு திருடனும் இருப்பதாக நினைத்துக்கொள். அத் திருடனுக்குத் தூக்கம் வரும் என்று எண்ணுகிறுயா? வரவே மாட்டாது. அவ்வறைக்குச் சென்று எப்படி அப் பொற் குவியலைக் கைக்கொள்வதென்னும் ஒரே நினைவுடன் அவன் இருப்பா

னல்லவா? அதேபோல, 'இத்தோற்
றங்களுக்குப் பின்னல் உண்மைப்
பொருள் ஒன்று உளது; கடவுள் ஒரு
வர் இருக்கின்ருர்; ஒப்பிட்டு நோக்குங்
கால் இந்திரிய சுகமெல்லாம் வீண்விளை
யாட்டு; அழிவே யற்ற கழிபேரின்பம்
பயக்கற்பாலதாம் ஒன்றுளது' என்று
நிச்சயமாக அறியப்பெற்ற ஒருவனல்
அதை யடையப் பெருமுயற்சி செய்யா
மல் சும்மா இருக்கமுடியுமா?, ஒரு
கணப் போதேனும் சிரமப்படாமல்,
முயற்சி செய்யாமல் நின்றுவிடுவான?
அதை அடையப்பெறவேண்டும் என்
னும் ஒரே ஆவல் நிறைந்த பைத்தியக்
காரனய் விடுவானல்லவா?" என்று
இப்பெரியாரே என்னிடம் கூறியுள்
ளார். இத்தெய்விகப் பித்து இச்சிறு
வரை இறுகப் பிடித்துக்கொண்டது.

அச்சமயத்தில் அவரது சந்தேகங்களை யகற்றிச் சாதனை வழிகளைக் காட்ட, குரு எவரையும் பெற்றிருக்கவில்லை. அனைவரும் அவரைப் பித்தர் என்றே கருதி வந்தனர். இஃது உலகில் சாதாரணமாக நடைபெறும் விஷயந்தான். ஒருவன் உலகத்தின் வீண் பெருமைகளை ஒழித்து விடுவானாகில் அவன் பித்தன் என்று கருதப்படுகின்றான். ஆனால் அவனைப் போன்றவரே உலகத்தில் உயர்ந்த புருஷராவார்கள். நம் இந்த உலகத்தையே ஆட்டி வைக்கும் சக்திகள் எல்லாம் அவ்வித பைத்தியத்திலிருந்தே வந்திருக்கின்றன. இனிமேலும் ஆட்டி வைக்கப் போகிற சக்திகள் அவ்விதப் பைத்தியத்திலிருந்துதான் வந்துதீரும்.

மெய்ப்பொருளை அடையவேண்டும் என்னும் ஓயா முயற்சியிலேயே நாட்க

ளும், வாரங்களும், மாதங்களும் கழியா நின்றன; சிறுவர் தெய்வக் காட்சிகளை யும் காணத் தலைப்பட்டார். அவரது உண்மை இயல்பின் இரகசியங்கள் அவ ருக்குப் புலப்படலாயின. இத்தனைகால மாக மூடி இருந்த திரைகள் ஒன்றன் பின் ஒன்ருகக் களைந்தெறியப்படுவன போல் தோன்றின. ஜகதம்பிகையே குரவராய் அமர்ந்து அச்சிறுவர் விரும் பிய உண்மைகளை யறிய வழிகாட்டி ஞர். இந்தச் சமயத்திலே கட்டழ குள்ளவளும், நிகரற்ற கல்வித்திறமை வாய்ந்தவளுமான ஒருமாது அங்கு வந்து சேர்ந்தாள். அம்மாதைக் குறித் துப் பிற்காலத்தில் அம் மஹாபுருஷர், "இவள் கல்வியறிவு உடையவளல்லள்; ஆனல் இவள் கல்வியின் உருவமாகவே திகழ்ந்தாள்; அது பாத்திரமன்று;

மனித வடிவந் தாங்கிய கல்வியே யாவாள்'' என்று கூறுவது வழக்கம். இங்கும் இந்தியர்களின் உயர்ந்த மனோபாவனையைக் காணலாம். இந்திய மாதர்கள் தமது இயல்பான அஞ்ஞான வாழ்க்கையின் இடையிலே யிருந்தும், மேனாடுகளில் கூறுகிறபடி சுதந்திரமற்ற வாழ்க்கையின் மத்தியிலிருந்தும், அவர்களிடையே மிக உயர்ந்த தெய்வீகப் பெண்மக்கள் தோன்றுகின்றனர். அவள் ஒரு சந்நியாசினியாவாள். எங்கள் நாட்டில் பெண்பாலரும் உலகைத் துறந்து, சொத்து சுதந்திரங்களைத் தூர எறிந்து, மணம் செய்துகொள்ளாமல் தமது காலமனைத்தையும் கடவுள் வழிபாட்டிலேயே கழித்து வருவது உண்டு. தக்ஷிணேச்வர அடவியில் வசித்துவந்த

சிறுவரைப்பற்றிக் கேள்விப்பட்ட போது அவரைக் காண அவ்வம்மை யார் தாமே அவ்வடவிக்குச் சென்ருர். அவருடைய உதவியைத்தான் சிறுவர் முதன் முதலாகப் பெற்றது. அச்சிறு வரைக் கண்ட அளவிலேயே அவரது கஷ்டம் இன்னது என்பதைத் தெளி வாக உணர்ந்துகொண்டு அவரைப் பார்த்து, "குழந்தாய்! இவ்விதப் பைத் தியங்கொண்டவனே பாக்கியம் பெற்ற வனுவான். இந்த உலகத்தார் அனை வருமே பித்தர்; சிலர் பொன்னுக்கும், ஒரு சிலர் மண்ணுக்கும், வேறுசிலர் புகழுக்கும், மற்றுஞ் சிலர் சிற்றின்ப சுகத்திற்கும், இன்னும் சிலர் நூற்றுக் கணக்கான பிறவற்றிற்குமாகப் பித் துண்டு உழல்கிருர்கள். அவர்கள் பொன்னுக்கும், அல்லது மகளிரின்பங்

களான அற்ப விஷயங்களை யடையவும், அயலாரை அநியாயமாக அடக்கியாள வும், பெரு நிதி படைத்த குபேரனுக வும், கடவுளை யொழிந்த இவ்வற்ப வஸ் துக்களின் பொருட்டு முட்டாள் தன மாகப் பித்தேறி அலைகின்றனர். ஒவ் வொருவரும் தங்களைப் போன்றவர் நிலைமையைத்தான் அறிந்துகொள்ள முடியும். ஒரு மனிதன் பொன்னை யடையப் பித்துப் பிடித்து அலைவா னுயின் அவனிடம் அனுதாபம் கொள் பவர்களும் அவனுக்குக் கூடுமான உதவிபுரிபவர்களும் அநேகர் இல்லா மற் போகவில்லை. பைத்தியக்காரர்கள் புத்தி தடுமாறிய நிலையையே விவேக நிலை என்று கருதுவது போல இப் பொன் பைத்தியம் கொண்டவனே சரி யான மனிதன் என்பார்கள். ஆனல்

ஒருவன், ஆருயிர் ஆகிய எல்லாம் வல்ல இறைவனிடத்தில் பித்துக் கொண்டிருப்பானாகில் அவனை மனிதர் எங்ஙனம் அறிந்துகொள்ள இயலும்? 'மூளை கலங்கினவன், அவனிடம் நமக்கொரு காரியமுமில்லை' என்று புறக்கணிக்கின்றனர்! ஆகவே குழந்தாய்! பொன் முதலான அற்ப விஷயங்களில் பித்துக் கொள்ளும் இயல்புள்ள மாந்தர் உன்னைச் சித்த ஸ்வாதீனமற்றவன் (புத்தி தடுமாறினவன்) என்று கூறுகின்றனர். ஆனால் உண்மையில் உன்னுடைய பித்தே சரியானதாகும். பகவானிடம் பக்தி கொண்டவனே பாக்கியவந்தன் ஆவான். அத்தகையோர் மிகச்சிலரே" என்று கூறினார். இம்மாது சிரோமணியார் அநேக ஆண்டுகள் இச்சிறுவருடன் இருந்து, இந்து

மதத்தின் பலவேறு மார்க்கங்களை யுப தேசித்து யோக வழிகளையும் அப்பிய சிக்கச் செய்தார். அவரது இவ்வுதவி இந்தியாவின் ஆத்ம ஞானமாகிய பலம் பொருந்திய ஒரு நதியை ஒழுங்குப் படுத்தி வழி நடத்தியது என்று சொல் லும்படியாக விருந்தது.

சின்னாட்களுக்குப் பின் அதே வனத் திற்கு இந்தியாவில் பிச்சை யேற்றுண் ணும் வகுப்பைச் சார்ந்தவரும், பெரும்படிப்பாளியும், தத்துவஞானியு மான ஓர் சந்நியாசி வந்து சேர்ந்தார். அவர் அரிய கொள்கையை அனுசரிப் பவர். இவ்வுலகம் உண்மையில் இருப்ப தாக நம்பாதவர். இவரது இக்கருத்தை வாழ்க்கையில் நடத்திக்காட்டும் பொரு ட்டே இவர் ஒருபோதும் கூரையின் கீழ்ப் போகமாட்டார்; சண்டமாருத

மானாலும் சூரிய வெப்பமானாலும் வேறுபாடின்றி வெளியிலேயே வாழ்ந்துவருவார். இத்துறவி நமது சிறுவருக்கு வேதாந்த தத்துவங்களை உபதேசித்து வரும் நாட்களில், என்ன ஆச்சர்யம்! சிஷ்யர் குருவைக் காட்டிலும் சில விஷயங்களில் மேம்பட்ட அறிவுடையவராகத் தோன்றலாயினர். இத்துறவி பல மாதங்கள் அச்சிறுவருடன் உறைந்து,பிறகுஅவருக்குச் சந்நியாசம் கொடுத்துப் பிரிந்து போய்விட்டார்.

கோயிற் பூசாரியாய் இருந்துவரும் நாட்களில், இவரது விபரீத வழிபாட்டினைக் கண்ணுற்ற மாந்தர் அனைவரும் இவரை மூளைகலங்கியவர் எனவே கருதினர். இவருடைய உறவினர் இவரைத் தமதூருக்கு அழைத்துச் சென்று, இவரது சித்தம் மாறித் தெளிவடையும் என்

னும் கருத்துடன் ஒரு சிறு பெண்ணை விவாகம்செய்வித்தார்கள். ஆனல் மன்றலானதும் சிறுவர் திரும்பவும் காளி கோவிலுக்கு வந்து நாம் முன்கூறிய தம்முடைய பைத்தியத்தில் மேன் மேலும் ஆழ்ந்துபோனர். எங்கள் தேசத்திலே சிற்சில வேளைகளில் சின்னஞ் சிறுவர்களா யிருக்கும்போதே பெற்றோர்கள் தங்கள் சிறுவர் சிறுமிகளுக்கு மணம் செய்விக்கும் வழக்கம் உண்டு. இதனல் சிறுவர்களுக்கு யாதொரு சுதந்திரமுமில்லை. ஆனல் இவ் விவாகம் ஒப்பந்தவளவே யாகும். ஏனெனில் மன்றலான பின்னும் சிறுவனும் சிறுமியும் (மணமகனும் மணமகளும்)தத்தம்பெற்றோருடனேயேவாசம் செய்து கொண்டிருப்பார்கள். பெண் தக்க வயது பெற்ற பின்னரே உண்மை

யான விவாகம்நடைபெறும்; அப்போது தான் மணமகன் மணமகளைத் தன் வீட்டிற்கு அழைத்துவருவது வழக்கம். எனினும் குறிப்பிட்ட இப்பெரியாரோ தமக்கு ஓர் மனையாள் உண்டு என்பதையே முற்றும் மறந்துபோயினர். நெடுந் தூரக் கிராமத்திலிருந்த இவரதுமனைவி, தன் கணவர் மத விஷயத்தில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றார் என்றும், அநேகரால் பைத்தியக்காரர் என்று கருதப் படுகின்றார் என்றும் கேள்விப்பட்டு அதனுண்மையைத் தானே நேரில் கண்டறியத் துணிந்து கொழுநன் இருக்குமிடத்திற்குக் கால்நடையாக நடந்து செல்லலானாள். ஆணோ பெண்ணோ எவரா யிருப்பினும் மத சம்பந்தமான வாழ்க்கையில் ஈடுபட்டுச் சந்நியாசம் கொள்வாராகில் எல்லா உலகக் கடமை

களிலிருந்தும் விடுபட்டவர்களாய் விடுவது எங்கள் நாட்டிலுள்ள பொதுவிதியாயினும், இப்புருஷர், தமது மனைவி தம்முன் வந்துநின்றதும், மனைவியாகிய அவள் தமது வாழ்க்கையில் உரிமையுடையவள் என்று ஏற்றுக்கொண்டு, "என்னைப் பொறுத்தவரையில் எல்லாப் பெண்டிரிடத்திலும் தான் குடிகொண்டிருப்பதாக ஜகன்மாதா எனக்குக் காட்டி யிருக்கிருள். ஆகவே மகளிர் அனைவரையும் எனது அன்னையாகக் காணக் கற்றுக்கொண்டிருக்கிறேன்; அதே அன்னையாகத்தான் உன்னையும் நான் காண்கிறேன். ஆனால் உன்னை எனக்கு மணம் செய்வித்திருக்கிறபடியால், என்னை லௌகிக வாழ்க்கைக்கு இழுக்க விரும்புவாயானல் அதற்கு நான் தடையேதும் செய்

வதற்கில்லை" என்று சொல்லி அம்மாது சிரோமணியின் பாதங்களில் வீழ்ந்து பணிந்தார். அப்பெண்மணி யாரோ பரிசுத்தமான ஆத்ம சொரூபியாகையாலே தமது கணவரது நிலைமையையும் அவரது குறிக்கோளையும் அறிந்து அவரிடம் அனுதாபம் காட்டத்தெரிந்துகொண்டார். ஆகவே அவர் தமது கணவரைப் பார்த்து, லௌகிக வாழ்க்கை நிலைக்கு அவரை இழுத்துவிடத் தாம் விரும்பவில்லையென்றும் அவருக்குத்தொண்டுபுரிந்து அவரது பெருமையை அறிந்துகொள்ளவே அங்கு வந்ததாகவும் பதிலுரைத்தார்; அதுமுதல் அம்மாதரசியார் அவரது அத்யந்த சீடர்களுள் ஒருவராக அமர்ந்து அவரைத் தெய்வாம்சம் பொருந்தியவராகக் கருதிப் பூசித்துவந்

தார். இவ்விதமாகத் தமது மனைவியாரது சம்மதத்தினாலேயே தமக்கேற்பட்டிருந்த கடைசித் தடங்கலும் அகன்று தாம் விரும்பியபடி வாழ்வதற்குச் சுதந்திரரானார்.

இரண்டாவதாக, பல வேறு மதங்களின் உண்மையைத்தெரிந்துகொள்ள வேண்டும் என்னும் ஆசை இவரைப் பிடித்து வாட்டத் தொடங்கியது. அது வரையில் தமது சொந்த மதத்தைத் தவிர்த்து வேறெந்த மதத்தைப்பற்றியும் இவர் அறிந்தவரல்லர். பிற மதங்கள் எத்தகையன என்பதை அறிய ஆவல் கொண்டபடியால் அவ்வம் மதங்களின் ஆச்சாரியர்களைத் தேடத் தலைப்பட்டார். இந்தியாவிலுள்ள நாங்கள் ஆச்சாரியர்என்று கூறும்போது நீங்கள் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டிய

தொன்றுண்டு; அஃதாவது நாங்கள் எவரை ஆசாரியார் என்கிறேமோ அவர்கள் வெறும் ஏட்டுப் படிப்புடையவர் அல்லர்; அநுபூதி வாய்ந்தவராவார்கள். பிறரால் அன்றி உண்மையைத் தாமே நேரிற்கண்ட பெரியார்கள் எனவே கொள்கிறேம். எனது குருநாதர் மகம்மதிய பக்கிரியைக் கண்டு அவருடன் வாழ்ந்து அவர் போதித்த சாதனங்களிற் பழகி வந்தார். இச்சாதனங்களும் உண்மையாக அநுசரித்து வந்தபோது தாம் முன்னமே பெற்றிருந்த அநுபூதி நிலைக்கு இட்டுச் சென்றது உணர்ந்து ஆச்சரியப்பட்டார். இயேசுநாதர் உண்மையில் போதித்த மதத்தையும் அநுஷ்டித்தபோது இதுபோன்ற அநுபவத்தையே அடையலானுர். தமக்குத் தெரிந்த எல்லா மார்க்கங்களிலும்

இறங்கி அவ்வவற்றில் கூறியவண்ணம் முழு ஆதரத்துடன் ஈடுபடலாயினர். அவ்வம்மார்க்கங்களிற் சொல்லப்பட்ட படி எல்லா விஷயங்களிலும் ஒரு சிறிதும் வழுவாது நடந்துவந்தபோது கடைசியாக அவ்வொரே முடிபு இவர்க்குப் புலனாயிற்று. இவ்விதம் தமது சொந்த அனுபவத்தின்மூலமாக எல்லா மதங்களின் முடிபும் ஒன்றே எனவும், ஒவ்வொரு மதமும் ஒன்றான அவ் இலக்ஷியத்தையே போதிக்கின்றன வெனவும், அநுசரிக்கும் முறையிலும், முக்கியமாகப் பாஷையிலுமே வேற்றுமை இருக்கின்றதெனவும் அவர் அறிந்துகொண்டார். ஒவ்வொரு மதத்திற்கும் அவற்றின் உட்பிரிவினைகளுக்கும் நடுநாயகமாக வீற்றிருப்பது ஒரே இலக்ஷியம், மாந்தர் தத்தம் சுய நலத்தின்

பொருட்டே சண்டை யிடுகின்றனர். உண்மைப் பொருளை அறிய அவர்கள் ஆசைப்படாமல்கடவுளுக்குத்தாமிட்ட பெயர்க்கே ஆத்திரப்படுகின்றனர். இரு மதஸ்தர்களும் ஒரே உண்மையைத் தான் போதிக்கின்றனர்; என்றாலும் ஒருவன், "அஃது உண்மையாகாது; ஏனெனில் என்பெயருள்ள முத்திரையை அதில் நான் போடவில்லை. ஆகவே அவனுக்குச் செவி சாய்க்க வேண்டாம்" என்கிறான். பிற மதத்தானும் அவன் கூறுவதைக் கேட்க வேண்டா, அவன் கூறுவது நான் கூறுவதைப் பெரும்பாலும் ஒத்திருப்பினும் அவன் என்னுடைய பேரினாலேயே போதிக்கிறானில்லை யாகையால் அவனுக்குக் காது கொடுக்கலாகாது" என்று கூறுகின்றான்.

இதுவே எனது குருநாதர் கண்ட உண்மையாகும். பிறகு தன்னடக்கம் என்பதை அநுசரிக்கலானர்; ஏனெனில் ஒவ்வொரு மதத்திலும் 'நானல்லன்! எல்லாம் நீயே' என்னும் ஒரு விஷயமே போதிக்கப்பட்டிருக்கின்றது. எவனொருவன் 'நானல்லன்' என்கிறுனே அவனது இருதயத்திலேயே பகவான் வாசம் செய்கிறுர். எவ்வளவுக் கெவ்வளவு 'நான்' என்னும் இவ்வகங்காரம் சாகிறதோ அவ்வளவு அதிகமாக ஈசுவரன் அவனிடம் குடிகொள்கிறுன். இந்த ஒரு விஷயமே உலகத்திலுள்ள எல்லா மதங்களினுடைய இலக்ஷியம் எனத் தெரிந்துகொண்டு அதைத் தமது வாழ்க்கையில் நிறைவேற்றத் தொடங்கினர். எதையேனும் செய்ய விரும்பினல் முன்னமேயே நான் கூறியபடி

அவர் அக்காரியத்தின் அதிநுட்பமான தத்துவங்களோடு நின்றுவிடாமல் அடுத்த கணத்திலே அதை அநுஷ்டானத்தில் கொணர்ந்துவிடுவார். ஈகை, சமத்துவம், பிறஜனங்களினுரிமை, என்றின்ன அதி அபூர்வ சூக்ஷ்ம விஷயங்களைப்பற்றிப் பேசும் மாந்தர் பலரை நாம் காண்கிறோம்; எனினும் அவைகள் அவ்வளவும் தத்துவத்தோடு கூடிய வார்த்தையளவில் நின்றுவிடுகின்றன. இத்தத்துவங்கள் அனைத்தையும் தமது வாழ்க்கையில் அநுஷ்டித்துவந்த ஓர் பெரியாரைப் பார்க்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. எதுவொன்று தமக்கு உண்மையெனத் தோன்றுகின்றதோ அதைத் தமது வாழ்க்கையில் அநுஷ்டிக்கும் அபூர்வ சக்திவாய்ந்தவராய் இருந்தார் அவர்.

இப் பெரியார் வசித்துவந்த அடவிக் கருகில் ஒரு பறைச்சேரி இருந்தது. இந்தியாவில் லக்ஷக் கணக்கான பறையர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் மிகமிகத் தாழ்ந்த மக்களாகையினாலே பார்ப்பனன் ஒருவன் தன் வீடுவிட்டு வெளிவந்ததும் ஒரு பறையனைக் கண்கொண்டு பார்த்துவிட்டால் அதனாலுண்டாகும் தோஷ நிவர்த்திக்காக அன்று முழுதும் பட்டினி கிடந்து சில மந்திர வாக்கியங்களை ஓதவேண்டுமென்று எங்கள் நாட்டு நூல்களிற் சில கூறுகின்றன. சில நகரங்களிலே பறையர்கள் வீதி வழியாகச் செல்ல நேருமானால், அவர்கள் தாங்கள் பறையர்கள் என்பதற்கு அறிகுறியாகக் காக்கையிறகொன்றைத் தலையிற் செருகிக் கொண்டு "உங்களைக் காத்துக்கொள்ளுங்

கள்; வீதி வழியாகப் பறையன் செல்கிறான்'' என்று உரக்கக் கூவுவதுண்டு. என்ன ஆச்சரியம்! இவ்வார்த்தைகளைச் செவியுற்றதும் சனங்கள் மந்திர சக்தி போல் மாயமாய்ப் பறந்தோடி விடுவதைக் காண்பீர்கள்! ஏனெனில் தற்செயலாக அவனைத் தொட்டுவிட்டால் நீராடவும் வஸ்திரங்களை மாற்றவும், வேறுபிறவும் செய்ய நேருகின்றன. தன்னுடைய மெய் தீண்டலால் பிறர் அசுத்தமாகி விடுகின்றனர் என்பதை ஒவ்வொரு பறையனும் ஆயிரக்கணக்கான வருஷங்களாக நம்பி வருகின்றான். அத்தகைய பறையன் ஒருவன் வீட்டிற்கு எனது குருநாதர் சென்று அவனது வீட்டைச் சுத்தம் செய்வதற்கு அனுமதி கேட்பார். நகர வீதிகளின் அழுக்கை அகற்றுவதும், ஒவ்வொரு இல்

லத்தின் அசுத்தத்தை அப்புறப் படுத்துவதுமே பறையர்களின் தொழில். அவன் வாயில்வழியாக உள்ளே செல்லக்கூடாது. புறக்கடைவழியாகத்தான் நுழைந்து செல்லவேண்டும். அப்படி வந்து அசுத்தங்களை எடுத்துப்போனதும் அவன் வந்ததால் உண்டாகும் தோஷ நிவர்த்திக்காக நீர் தெளித்து அத் தலத்தைப் புனிதப்படுத்துவது வழக்கம். பிறப்பினுல் ஒரு பார்ப்பனன் தெய்வத் தன்மைக்கு அறிகுறியாய் இருக்கிருன். பறையனே அதற்கு முற்றிலும் எதிரிடையான இழி நிலைக்கு உதாரணமாகின்ருன். அத்தகையபிராம்மண குலத்திலுதித்த எனது குருநாதர், ஒரு பறையனது வீட்டின் அசுத்தங்களை அப்புறப் படுத்துவதற்கு அநுமதி கேட்பார். பறையனே அதற்கு ஒரு

சிறிதும் சம்மதிக்க மாட்டான்; ஏனெனில் அவ்வித இழிதொழிலை ஒரு பார்ப்பனனைச் செய்ய விடுத்தால் அது தங்களுக்கு மகா பாதகத்தை விளைவித்துத் தங்களைப் பூண்டற அழித்து விடுமென்று பறையர் நம்புகின்றனர். பறையன் அவ்விதம் செய்ய இடம் கொடுக்காததாலே, ஸ்ரீராமகிருஷ்ணர் நள்ளிரவில், அவனும் அவன் வீட்டாரும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருக்கும் பொழுது வீட்டிற்குள் நுழைவார். அவருக்கு அப்பொழுது தலைமயிர் நீண்டு வளர்ந்திருந்தது; துடைப்பத்திற்குப் பதிலாக அம்மயிர்கொண்டு துடைத்து "அன்னை! என்னைப் பறையனுக்கும் அடிமை யாக்குவாய்; பறையனிலும் தாழ்ந்தவன் நான்—என்னும் உணர்ச்சியை என்னுள் எழுப்புவாயாக"

என்று ஜகதம்பிகையைப் பிரார்த்தனை செய்துகொண்டே அப்பறையன் வீட்டுக் கொல்லையைக் கழுவுவார். "அடியாரைப் பூசிப்பவர்களே எனது பக்தர்களிற் சிறந்தவர்கள்; அவர்களெல்லோரும் என் குழந்தைகளாகையால் அவர்களுக்குத் தொண்டு செய்வதே எனது உரிமையாகும்" என்ற தெய்வ வாக்கே ஹிந்து சாஸ்திரங்களின் உள்ளக் கிடக்கை.

இங்ஙனம் அவர் அநுசரித்த சாதனைகள் பலவாகும்; அவை அனைத்தையும் எடுத்துரைப்ப தென்பது இப்போது இயலாத காரியம். ஆகவே அவரது சரித்திரத்தைச் சுருங்க உரைக்க விரும்புகிறேன். நாற்பது வருஷகாலம் இவ்விதம் தம்மைப் பலவிதமாகப் பயில்வித்து வந்தார். ஆன்மா, பால் வேற்

றுமை யற்றது; அஃது ஆணுமன்று; பெண்ணுமன்று. ஆகையாலே இப்பால் வேற்றுமை தம்மிடமிருந்து முற்றும் நீங்கப் பெறும்போதுதான் சமய வாழ்க்கையில் பூரணத்தன்மை அடைய முடியுமென்று அவர் உறுதியாக நம்பியிருந்தார். சரீரத்திலேயே ஆண் பெண் என்ற வேற்றுமை உளது; ஆத்மாவை அடைய ஆசைப்படும் ஒருவன் அதே சமயத்தில் ஆண் பெண் வித்தியாசம் கொள்ளுதல் கூடாது. ஆடவராகப் பிறந்ததனுலே இப்புருஷர், எல்லா விஷயத்திலும் தம்மைப் பெண் தன்மையுள்ளவராகக் கருதலானுர். தம்மிடமிருந்து பால் வேற்றுமை முற்றிலும் அகலும் வரைக்கும் பல வருஷகாலம் அவர் தம்மை ஓர்பெண்ணுக நினைத்து, பெண் போல் உடுத்து, பெண்போற் பேசி

ஆடவர் செய்யும் செயல்களை விடுத்துப் பெண்டிரது காரியங்களைக் கைக்கொண்டு உயர்குலப் பெண்டிர்களுடன் அந்தப் புரத்தில் வசிக்கலானார். இவ்விதச் சாதனையால் ஆண்பெண் வேற்றுமையை அறவே நீக்கினார். அவரது வாழ்க்கை முழுதும் இங்ஙனம் மாறிவிட்டது. மேனாட்டிலே பெண்களைப் போற்றுவது எதன் பொருட்டு? பொதுவாக அவர்களது இளமைக்கும் கட்டழகிற்குமே. ஆனால் இப்பெரியார் பெண்களை ஏன் பூசித்தாரென்றால், அவர் மகளிர் ஒவ்வொருவர் முகத்திலும் அன்னை ஜகதம்பிகையைத் தவிர்த்து வேறொன்றும் காணவில்லை. சமூகத்தினரால் புறக்கணிக்கப்பட்ட பொது மகளிரது முன்னிலையில் நின்றுகொண்டு அவர்கள் கால்களில் வீழ்ந்து,

"அம்பிகே! என் ஆருயிர் அன்னையே! ஒரு வடிவத்தில் நீ பொதுமகளாயும், மறுவடிவத்தில் ஜகதம்பிகையாகவும் விளங்குகின்றாய்; அத்தகைய உனக்கு நமஸ்காரம், நமஸ்காரம்" என்று கண்களில் நீர் பெருகச் சொன்னதை நான் கண்ணாரக் கண்டேன். என்ன பரமாநந்த வாழ்க்கை! எல்லாச் சிற்றின்ப ஆசைகளும் அகன்றுவிட்டன; ஒவ்வொரு பெண்ணையும் அன்பு வணக்கத்தோடு நோக்குவது! ஒவ்வொரு மகளிரின் முகமும் மாற்றப்பட்டு மனிதவர்க்கத்தையே ரக்ஷிக்கும் ஆநந்த மயமான அன்னை ஜகதம்பிகையே அம்முகத்தில் பிரகாசிக்கச் செய்வதான வாழ்க்கை அது! இவ்வித வாழ்க்கையே நாம்விரும்பத்தக்கது. பெண்களிடமிருக்கும்தெய்விகத் தன்மையை மறைக்க முடியு

மென்று எண்ணுகின்றீர்களா? அது ஒரு போதும் முடியாது; இனியொரு போதும் இயலாது; சலிக்காது எப் போதும் போல் உறுதியாக நிற்கின் றது. அது குற்றத்தை வெளிப்படுத் தத் தவறுவதில்லை. பொய் வேடத் தைப் பகிரங்கப்படுத்தப் பின் வாங்குவ தில்லை; உண்மையின் வேகத்தை உண் மையாக உணருகின்றது; ஆத்மிக ஒளியை நிச்சயமாக அறிந்து கொள் கின்றது. உண்மையான ஆத்மஞானம் அடைய வேண்டுமானால் இவ்வித பரி சுத்தம் வேண்டியது மிக மிக அவசிய மாகும்.

சிறிதும் மாசு மறுவுக் கிடமில்லாத அவ்வளவு கண்டிதமான பரிசுத்தத் தன்மை இவர் வாழ்க்கையில் மிளிர்ந் தது. நமக்கெல்லாம் இருந்து வரும்

படியான வாழ்க்கைத் துன்பங்கள் இவருக்கில்லாது போயின. தமது ஆயுளில் முக்கால் பாகம் செலவு செய்து அதிசிரமத்துடன் சம்பாதித்தவையான ஆத்மஞான ரத்தினங்கள் எல்லாம் மனித வர்க்கத்திற்குக் கொடுப்பதற்காகச் சித்தமா யிருந்தன.

அதன் பிறகு அவர் தமது கைங்கர்யத்தைச் செய்யலானுர். அவரது உபதேசங்களும் உபந்யாசங்களும் விசித்திர மானவைகள். எங்கள் நாட்டிலே ஆத்மஞான குரு வொருவர் கடவுளாக மதிக்கப்பட்டுப் பக்திபூர்வமாகப் பூசிக்கப் படுபவராவர். எங்கள் தாய் தந்தையர்களுக்குங்கூட அவ்வளவு மரியாதை நாங்கள் செய்வது கிடையாது. தாயும் தந்தையும் நமது சரீரத்தை மாத்திரம் தருகின்றனர்; ஆனுல் குரு

வோ மோக்ஷத்திற்கு வழி காட்டுகின்றார். நாங்கள் அவருக்கு ஆத்மஞான வழியில் தோன்றிய குழந்தைகளாவோம். அதி உன்னத நிலையடைந்த ஆசாரியர் எங்கேனும் இருக்கின்றார் என்று கேள்விப்பட்டால் இந்துக்களெல்லாம் அங்கே சென்று அவரைச் சூழ்ந்துகொண்டு அவரைப் பயபக்தி விநயத்துடன் பூசிக்கின்றனர். அத்தகைய அபூர்வ ஆசாரியராக விளங்கினார் இப் பெரியார்; எனினும் தாம் ஒரு பெரியமதபோதகர்என்னும் எண்ணம் சிறிதும் கொண்டவரல்லர். யாவையும் இறைவியே இயற்றி வருகின்றாள், தாமல்ல என்று எண்ணினார். "நன்மை பயக்கத்தக்க வார்த்தைகளவையேனும் எனது வாயினின்றும் வந்தால் அவை யெவையும் என்னுடையவைக

ளல்ல; அன்னையே அங்ஙனம் பேசு கின்றாள்,'' என்று எப்பொழுதும் அவர் கூறுவதுண்டு. அதுவே தமது வேலைகளைப்பற்றியும் அவருக்கிருந்த உட்கருத்து. தமது முடிவுகாலம் வரை அவர் இந்த மனோபாவத்தைச் சிறிதும் மாற்றினாரில்லை. அவர் எவரையும் தேடிச் சென்றது கிடையாது. முதலில் நல்லொழுக்கத்தையும் ஆத்ம ஞானத்தையும் தேடிக்கொள்; வரவேண்டிய பலன்கள் தாமே வந்தெய்தும் என்பது அவரது கொள்கை.

"தாமரை மலர்ந்ததும், தேனைப் பருகத் தேனீக்கள் தாமே வந்து சேர்கின்றன; அதேபோல உன் ஒழுக்கமாகிய தாமரை பரிபூர்ணமாக மலரட்டும். அதனுடன் பலன்கள் தாமும் பின்பற்றி வருவது நிச்சயம்'' என்பது அவ

ரது பிரியமான உவமையாகும். இது அனைவரும் கற்கவேண்டிய பெரிய தொரு படிப்பினை. எனது குருநாதர் நூற்றுக்கணக்கான முறை இப் படிப் பினையை எனக்குப்போதித்தார்; எனி னும்இதைஅடிக்கடிமறந்துவிடுகிறேன். சிந்தனையின் அபார சக்தியை அறிந்த வர் ஒரு சிலரே. ஒரு மனிதன் குகை யொன்றில் புகுந்து தன்னை முற்றிலும் அடைத்துக்கொண்டுமிக உன்னதமான ஒரெண்ணத்தை மாத்திரம் எண்ணி விட்டு இறந்துபட்டாலுங்கூட, அந்த எண்ணமானது குகையின் சுவர்களைத் துளைத்துக்கொண்டு ஆகாயத்தின் மூல மாகப் பரவி இறுதியில் மனிதவர்க்க முழுவதிலும் ஊடுருவிப் பாய்கின்றது. அவ்வளவு அபாரமானதாகும் சிந்தனு சக்தி யென்பது. ஆகவே உன்னுடைய

கருத்தைப் பிறருக்குரைக்க அவசரப் படாதே. கொடுப்பதற்கு ஏதேனும் முதலில் சம்பாதித்துக்கொள். கொடுப் பதற்கு ஏதேனும் வைத்துக்கொண் டிருப்பவனே உபதேசம் செய்பவனு வான்; ஏனெனில் உபதேசம் வெறும் வாய்ப்பேச்சன்று; உபதேசம் என்பது சில கொள்கைகளை வெளியிடுவதுமாத் திரமன்று; ஆனால் நம்முடைய சுபா வத்தை—தன்மையைப் பிறருள் செலுத்துவதேயாகும். ஒருபுஷ்பத்தை எங்ஙனம் நான் உமக்குக் கொடுக்கக் கூடுமோ, அதேபோன்று ஆத்மஞான மும் அவ்வளவு உண்மையாகப் பிறருக் களிக்கக்கூடியதே. இவ் வுபமானம் முற்றிலும் உண்மை. இவ் விஷ யம் இந்தியாவில் நெடுங்காலமாக இருந்து வருகின்றது. மேனாட்டில்

தீர்க்க தரிசிகளின் தொடர்ச்சியில் இருக்கும்நம்பிக்கையும் கொள்கையுமே இக்கருத்திற்கேற்ற அத்தாட்சியாகும். ஆகவே முதலில் ஒழுக்கம் சம்பாதித்துக்கொள்—அதுவே நீ செய்ய வேண்டிய உயர்ந்த தருமம். மெய்ப்பொருளை நீ தெரிந்துகொண்டவனாக இரு; பின்னர் அநேகர் உன்னை நெருங்குவர். அப்போது நீ அவர்களுக்கு உபதேசம் செய்யலாம். உண்மையில் அவர்கள் எல்லோரும் உன்னிடம்வந்து சேர்வார்கள். நீ அவர்களைத் தேடிச் செல்லும் அவசியமில்லை. இதுவே எனது குருநாதரின் மனோபாவனை. அவர் எவரையும் குறைகூறியது கிடையாது. அநேக ஆண்டுகளாக அவருடன் வசித்து வந்தேன். எனினும் எந்த மதத்தைக் குறித்தேனும் அவரது வாயிலிருந்

தெழுந்த நிந்தனை மொழிகளை நான் கேட்டதே இல்லை. ஒவ்வொரு மதத்தி னிடத்தும் அவருக்கு அபிமான மிருந் தது. எல்லா மதங்களிலும் சமரசத் தைக் கண்டறிந்தவர். ஒருவன் ஞானி யாக விருக்கலாம்; பக்தியுள்ளவனு கவோ, பெரிய யோகியாகவோ, அன் றிக் கர்மத்தில் சித்தி பெற்றவனுகவோ இருக்கலாம்; உலகத்திலுள்ள பல்வேறு மதங்களும் இப்பாவனைகளில் ஏதேனும் ஒன்றைக் குறிக்கின்றன. எனினும்இவ் வெல்லா பாவனைகளையும் ஒரே மனிதன் அடையும்படிச் செய்யலாம்; இவ் வுயர்ந்த நிலையைத்தான் இனி வருங் கால மனிதவர்க்கம்அடையப் போகின் றது. இதுவே அவரது கொள்கை. ஒரு வரையும் அவர் குறைகூறவில்லை. எல்

லோரிடத்தும் அவர் நன்மையைத்தான் கண்டார்.

இவ்வபூர்வ மனிதரைத் தரிசிக்கவும் அவரது வார்த்தைகளைக் கேட்கவும் மாந்தர் ஆயிரக்கணக்காக வந்துகொண்டிருந்தனர். அவர் வாயினின்று எழுந்த ஒவ்வொரு வார்த்தையும் சர்வசக்தியும் இயற்கைச் சோபிதமும் வாய்க்கப்பெற்றிருந்தன. பேசப்படுவதில் அல்ல; பேசும் பாஷையிலும் விசேஷம் இல்லை. அவர் கூறும் ஒவ்வொரு வார்த்தையிலும் குடி கொண்டிருக்கும் ஆத்ம சக்தியே அவ்வார்த்தைகளுக்கு அவ்வளவு உணர்ச்சியைத் தருகின்றது. இவ்வுண்மையைச் சிற்சில சமயம் நாமும் உணருகின்றோம். மிகுந்த வாக்சாதுர்யம் பொருந்திய சிறப்பான பிரசங்கங்களைக் கேட்கின்றோம். பொருத்

தமுள்ள தத்துவ ரீதியோடு கூடிய தர்க்கங்களைக் கேட்கின்றோம்; எனினும் வீடு சென்றதும் கேட்டனவெல்லாம் மறந்து போகின்றன. சில நேரங்களிலே ஏதோ சிற்சில வார்த்தைகள், சாதாரண பாஷையிலே பேசப்படுவன, நமது செவியகம் புகுந்தவுடனே அவை நமது உள்ளுக்குள்ளே புகுந்து உயிருடன் ஒன்றி நம்மை விட்டகலாத பலன்கள் தருகின்றன. எவன் ஒருவன் தான் பேசும் வார்த்தைகளின் மூலமாகத் தன் சக்தியைச் செலுத்தக் கூடியவனாயிருக்கின்றானோ அவனது வார்த்தைகள் வீண் போகின்றதில்லை. ஆனால் அவன் சிறந்த ஆத்ம சக்தி பெற்றவனாக இருக்கவேண்டும். எல்லா உபதேசங்களும் கொடுப்பதிலும் வாங்குவதிலும் நிலைத்திருக்கின்றன; குரு கொடுக்

கின்றார்; சீடன் கொள்கின்றான். ஆனால் கொடுப்பதற்குக் குரு தம்மிடம் ஏதேனும் வைத்திருக்க வேண்டும்; அதே போலச் சீடனும் அதைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவனா யிருக்கவேண்டும்.

இப்பெரியார் கல்கத்தா நகரினருகே வசிக்கலானார். இந் நகரம் இந்தியாவின் தலை நகரமாகவும், சர்வ கலா சாலைகளின் முதன்மைபெற்ற பட்டணமாகவும் விளங்குகின்றது. இக் கலாசாலையி லிருந்து வருஷந்தோறும் நூற்றுக்கணக்கான நாஸ்திகர்களும் ஜடதத்துவ வாதிகளும் வெளி வந்து கொண்டிருந்தனர். இக் கலாசாலை மனிதர்கள்நாஸ்திகராயும்சந்தேகவாதிகளாயும் இருந்தாலும் இப்பெரியாரிடம் வந்து அவரது உபதேசங்களைக் கேட்பது வழக்கம். நானும் இவரைப்

பற்றிக் கேள்விப்பட்டு அவர் கூறுவதைக் கேட்கச் சென்றேன். யாதொரு சிறப்புமில்லாத ஓர் சாதாரண மனிதராகவே அவர் எனக்குத் தோன்றினர். சர்வ சாதாரணமான பாஷையிலே பேசக்கண்ட நான் "இம்மனிதரும் ஒரு பெரிய ஆசாரியராக இருக்க முடியுமோ?" என்று சந்தேகப்பட்டேன். அவர் அருகிற் சென்று என் வாழ்நாள் முழுதும் அநேகரைக் கேட்டதான, "ஐயா, நீர் கடவுளைக்கண்டதுண்டா?" என்னும் கேள்வியையே இவரிடத்திலேயும் கேட்டேன். அதற்கு 'ஆம்' என்று மறுமொழி கூறினர். "தேவரீரால் அதை மெய்ப்பிக்க முடியுமா?" என்றேன். "முடியும்" என்று சொல்ல, "எப்படி" என்று வினவினேன். "நான் உன்னைக் காண்பது போலவே

அவரையும் காண்கின்றேன். அதிலும் மிகமிகத்தெளிவாகக் காண்கின்றேன்" என்றார் அம்மகான். உடனே அது என் மனதிற் பதிந்தது; ஏனெனில் கடவுளைக் கண்டிருக்கிறே னென்று தைரியமாகச்சொல்லக்கூடிய மனிதரை அப்போதுதான் நான் முதல் முதலாகக் கண்டேன்; மதம் என்பது அனுபவத்துக்குத் தகுந்த உண்மைதான் என்றும் உலகின்இருப்பை உணருவதினும் காண்பதினும் பார்க்க ஆயிர மடங்கு தெளிவாக அறியப் படுவதென்றும் தைரியமாகக் கூறக்கூடிய மனிதரை முதன்முதலாக அப்போதுதான் கண்டேன். அப்பெரியாரிடம்நான் அடிக்கடி போய்க்கொண்டிருந்தேன்; நாளடைவில் மதம் என்பது பிறருக்குக் கொடுக்கக்கூடிய பொருள் என்பதையும், நான்

தெளிவாகக் கண்டேன். கை பட்டால் போதும்; கடைக்கண் பார்வையே போதும்; ஒருவனுடைய வாழ்க்கை முழுவதையுமே மாற்றிவிடக் கூடும். புத்தர் பிரான், ஏசு நாதர், முகம்மது முதலியவர்களும் பழைய காலத்துப் பல வேறான விண் சுடரனைய மகான்க ளெல்லாம் ஒரு மனிதனைப் பார்த்து, "நீ பரிபூரணனுகக் கடவாய்" என்று கூறிய வளவிலே பூரணத் தன்மை யடைந்தார்கள் என்பதை நான் புத்த கங்களின் மூலமாய்ப் படித்திருந்தேன். ஆனுல் இப்போதே அது உண்மை என்று எனக்குத் தெரிந்தது. இப் பெரியாரை நான் நேரிற் கண்டவுடன் என்னுடைய சந்தேகங்கள் யாவும் பறந்து போயின. "உலகத்திலுள்ள மற்றெந்த வஸ்துவிலும் மதம் என்பது

உண்மையாகவும் தெளிவாகவும் உறுதியாகவும் பிறர்க்குக் கொடுத்தலுங் கூடும், பெறுதலுங் கூடும்" என்று எனது குருநாதர் கூறுவது வழக்கம். உண்மையில் அது பிறர்க்குக் கொடுக்கக்கூடியதாகும். ஆகவே முதலில் ஆத்ம ஞானியாகுக. கொடுப்பதற்கு ஏதேனும் கொஞ்சம் சேகரித்துக் கொள்ளுக. பிறகு உலகினருக்குக் கொடுக்க முன்வரலாம். மதம் என்பது வெறும் வாய்ப் பேச்சன்று; வெறும் கொள்கைகளும் அநுமானங்களுமல்ல; ஆசாரம் என்பது தானுமன்று, சமயம் சம்பிரதாயங்களையும் சமூகங்களையும் ஆதாரமாகக் கொண்டிருக்கவில்லை. ஆன்மாவிற்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தமே மதமெனப்படுவது; ஆகவே எப்படி அதை

ஜன சமூக மாக்கமுடியும்? அப்படிச் செய்யின் வியாபார நிலைமைக்கு வந்து சீர் குன்றிப்போம். எங்கெங்கு மதம் வியாபார தோரணையி லிறங்கி விடுகின்றதோ, அங்கு ஆத்ம ஞானம் அழிந்து போய்விடுகின்றது. கோயில் கட்டுவது, தொழுகைச் சாலைகள் நிரும்பிப்பது, அன்றிப் பொது வழிபாடு என்று இன்னவைகளிலே மதம் தங்கி இருக்கவில்லை. அது புத்தகங்களிலும் வாய்ப் பேச்சிலும், பிரசங்கங்களிலும், பொதுச் சங்கங்களிலும் காணப்படமாட்டாது. மதமெனப்படுவது ஆத்மானுபூதியேயாகும். உண்மையை நாமே உணரும் வரை மற்றேதும் நம்மைத் திருப்தி கொள்ளச் செய்யாது என்பது நாம் அறிந்ததொன்று. எவ்வளவுதான் நாம் வாதம் புரிந்தாலும், எத்தனைமுறை

தான் காதுகொண்டு கேட்டாலும் நம்மைத் திருப்தி செய்விப்பது ஒன்று மாத்திரமே. அவ்வொன்றுதான் சுவானுபூதி—தனக்குத்தானே உண்மையை உணர்தல். இவ் வனுபூதி, முயற்சி செய்தால் ஒவ்வொருவராலும் அடைதற்பாலதே. மதத்தைச் சுவானுபவமாக்குவதான முயற்சிக்கு முதற்படியா யிருப்பது துறவாகும். நம்மால் எவ்வளவு கூடுமோ அவ்வளவு துறந்துவிட வேண்டும். இருளும் ஒளியும், சிற்றின்பமும் பேரின்பமும் ஒரு போதும் ஒன்றிச் செல்லா.

ஒரே சமயத்தில் பகவானுக்கும் பிசாசுக்கும் தொண்டு செய்தல் இயலாது. வேண்டுமானல் ஜனங்கள் முயற்சி செய்து பார்க்கட்டும். இவ்விதம் முயற்சி செய்த இலட்சக்கணக்

கான மாந்தரை உலகமெங்கணும் நான் கண்ணுற்றிருக்கின்றேன். அவர்கள் முயற்சி யாவும் முடிவில் பாழ்பட்டுப் போகின்றன. சாஸ்திரங்களிலே உண் மையென்று சொல்லக்கூடிய வார்த்தை ஒன்று உளதானல் அதுவே துறவெ னப்படுவது—கடவுளின் நிமித்தம் சக லத்தையும் தியாகம் செய்துவிடுவது. இது ஒரு நீண்டதும் கடினமுமான காரியமாகும். எனினும் இப்போதே அதைச் செய்ய மேற்கொள்ளுங்கள். சிறிது சிறிதாக அதன் முடிவை அடைதல் வேண்டும்.

உலக மெங்கணும் உள்ள பல்வேறு சமயங்களும் ஒன்றுக்கொன்று முரண் பட்டும், விரோதத்துடனு மிருப்பன வன்று; அவை ஒவ்வொன்றும் நித்திய மான ஒரே மதத்தின் பல்வேருன வழி

களாகும் சாசுவதமான அம்மதம், இயற்கையின் நிலைமைக்குத் தக்கவாறும் பலவேறு சாதியாருடைய மனோபாவனைகளுடைய தகுதிக் கேற்றவாறும் அநுசரிக்கப்பட்டு வருகின்றது. இதுவே நான் எனது குருநாதரிடமிருந்து கற்றுணர்ந்த ஆச்சர்யமும் மிக முக்கியமுமான இரண்டாவது கொள்கையாகும். என்னுடைய சமயம் என்றும் உன்னுடைய சமயம் என்றும், எங்கள் நாட்டு மதம் என்றும் உங்கள் நாட்டு மதம் என்றும் தனித்தனியே யிருந்ததில்லை. பல சமயங்கள் எப்போதும் இருந்தது இல்லை. இருப்பது ஒரே சமயந்தான். முடிவே யற்ற இவ்வொரே மதம் சாசுவதமாக இருந்து வருகின்றது. இனிமேலும் நித்தியமாகவே இருந்து வரும். இவ்வொரு

மதமே பலவேறு தேசங்களிலே பல வேறு விதமாகத் தோன்றுகின்றது. ஆகவே ஒவ்வொரு மதத்திற்கும் நாம் வணக்கம் செலுத்துவோமாக. எவ்வளவு கூடுமோ அவ்வளவு நமது வாழ்க்கையிலும் அநுசரிக்க முயலுவோமாக. சமயமானது வமிச பரம்பரைக்கும் நிலப்பாகுபாட்டிற்கும் ஒப்ப அமைந்திருப்பதோடல்லாது ஒவ்வொருவருடைய சக்திக் கேற்பவும் வெளிப்படுகின்றது. ஒருவனிடம் மதம் தீவிர கர்மமாகத் தோன்றுகின்றது. மற்றொருவனிடத்திலோ அது ஆழ்ந்த பக்தியாக வெளிப்படுகின்றது. பிறிதொருவனிடத்தில் சிறந்த யோகமாகவும் ஏனையோரிடத்தில் ஞானமாகவும் பிறவாகவும் வெளிப்படாநிற்கின்றது. ஆகவே பிறரைப் பார்த்து "உமது

வழிமுறை குற்றமுடையது'' என நாம் குறைகூறுதல் தவறுனதாகும். பக்தியே சுபாவமாகவுடைய ஒருவன், பிறருக்கு எப்பொழுதும் நற்கருமத்தைப் புரிபவன் சமய வழியிற்செல்வதில்லையென்று நினைப்பதுண்டு. ஏனெனில் தான் போகும் மார்க்கத்தை அவன் அனுசரிக்கின்றதில்லையாதலால் அவன் பிழைபட்டவனுகி விடுகிறுன். ஒரு தத்துவஞானி "ஆ! கருணை நிதியான கடவுளைக்குறித்து இவ்வறிவற்ற மக்களால் என்ன தெரிந்து கொள்ளமுடியும்? அவனிடத்தில் பக்தி செலுத்தத்தான் அறிந்துளரா! தாம் கூறுவது இன்னதென்றே அவர்களுக்குத் தெரியாது'' என்று கூறுவானுகில் அவன் பிழைபட்டவனுவான் ; ஏனெனில் அவர்களுடைய வழிமுறைகள் ஒழுங்

கின்பாற் படலாம்; இவனுடையதும் முறைமையானதாக இருக்கக்கூடும். உண்மையானதுஒன்றேயானாலும் அது பலவிதமானதென்று சொல்லவுங் கூடும். அவ்வாறே உண்மை பல்வேறு நிலைமைகளுக்கு ஏற்றவாறு பலவித மாகத் தோன்றுகின்றது என்னும்முக் கிய ரகசியம் ஒவ்வொருவரும் அறிய வேண்டிய உண்மையாகும். ஆகவே எவரிடத்தும் விரோதம் கொள்ளாது எல்லோரிடத்தும் அளவுகடந்த அநு தாபசிந்தை கொள்ளவேண்டும். உல கத்திலே பல்வேறு சுபாவமுள்ள மக் கள் பிறக்கும் வரையில் அவ்வாறே மதமும் அவர் அவர் தகுதிக்கு ஏற்ற வாறு அமைக்கப்பட வேண்டியிருப்ப தும் நாம் அறியக் கிடக்கின்றது. ஆகவே ஒருவர்க்கொருவர் சகிப்புடை

யவர்களாயிருக்க வேண்டுமென்பதும் புலனுகின்றது. வேற்றுமையில் ஒற்றுமையிருப்பது இயற்கை. இயற்கையானது எல்லையற்ற பல மாறுதல்களுடன் கூடியுளது. அவ் அளவுகடந்த மாறுதல்களினூடேயும் மிகநுட்பமானதும், மாறுதலற்றதும், கலப்பில்லாததுமான ஒற்றுமைத்தன்மை அமைந்திருக்கின்றது. அதேபோல ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஏகத்துவம் இலங்குகிறது. பிண்டம் அண்டத்தினது நுட்பமான தோற்றமேயாகும். இவ்வளவு மாறுதல்களிருப்பினும், இவைகளினூடே நிரந்தரமாகச் சமரசம் பரவியிருக்கின்றதென்பதும் உண்மையாகும். இதை நாம் அங்கீகரிக்க வேண்டியிருக்கிறது. இக்கருத்தே மற்றெல்லாக் கொள்கைகளைப் பார்க்கிலும் இந்நா

ளில் அதி அவசியமாக வேண்டற் பால தென எனக்குத் தோன்றுகிறது. மத வேற்றுமைக்கே இருப்பிடமான ஒரு நாட்டிலிருந்து வந்துளே னுகையால் என் சிறுபிராயம் முதற்கொண்டே உலகிலுள்ள பல சமயங்களைப்பற்றியும் நான் அறிந்திருக்கின்றேன்.

மார்மன் சாதியினரும் இந்தியாவில் பிரசாரம் செய்ய வந்தனர். எல்லோருக்கும் அது நல்வரவு கூறிற்று ! அந்நாடே மதப் பிரசாரத்திற்கு ஏற்றதாயுளது. அங்கேயே மற்றெந்நாட்டினும் சமயம் வேரூன்றிப் பதிகின்றது. நீங்கள் வந்து ஹிந்துக்களுக்கு ராஜீய சம்பந்தமாய்ப் பேசினுல் அதை அவர்கள் அறிந்துகொள்ளுகிறதில்லை; ஆனுல் நீங்கள் மதப் பிரசாரம் செய்ய வருவீர்களாகில் அது எவ்வளவு விசித்திர

மானதாயிருப்பினும், `நூற்றுக்கணக்காகவும் அதி சீக்கிரமாக்வும் ஜனங்கள் உங்களைப் பின்பற்றுவார்கள்; உம்முடைய வாழ்நாளிலேயே நீங்கள் ஓர் உயிர் வாழும் கடவுளாகவும் ஆகிவிடுவதற்கான சந்தர்ப்பங்கூட வாய்க்கும். அதுபற்றி நான் சந்தோஷமடைகிறேன். இந்த ஒன்றே நாங்கள் இந்தியாவில் வேண்டி நிற்பது.

ஹிந்துக்களுக்குள்ளே மதப்பிரிவினைகள் நானுவகைப்பட்டனவாகவும் எண்ணிக்கையில் அதிகமாகவும் உள்ளன. அவைகளுட் சில மேற் பார்வைக்கு ஒன்றுக்கொன்று மிகவும் முரண்பட்டனவாக இருக்கின்றன. எனினும் இவை யாவும் ஒரே மதத்தின் பல தோற்றங்களே என்பதையும் அப் பிரிவினைகள் கூறுகிற்கின்றன. "பலவேறு நதிகள் பல

வேறு மலைகளிலிருந்து உற்பத்தியாகி நேராகவோ வளைந்தோ ஓடிக் கடைசியில் கடலில் சங்கமமாகின்றன. அதே போல பலவேறு பிரிவினைகள் தம் தம் கருத்துக்களுடன் இறுதியில்நின்னையே வந்து அடைகின்றன.'' இது வெறும் கோட்பாடன்று; ஒவ்வொருவராலும் அங்கீகரிக்கத் தக்க உண்மையாகும்.

'மற்றெல்லா மதங்களும் அபிவிருத்திக்கான சிறு சிறு திவலைகளாகும்; நம்முடையதோ எல்லாவற்றினது பூர்த்தியாகும்' என்னும் ஆச்சரியமான உதாரகுணம் வாய்ந்தவர்களாகவுளர் ஒரு சிலர். மதங்களினுள்ளே பழமையாயிருப்பதனாலே தன்மதமே சிறந்ததென ஒருவன் சாற்றுகின்றான். மற்றெல்லாவற்றினும்வெகு சமீபத்தில் ஏற்பட்டதால் தனதே சிரேஷ்டமென்று

பிறிதொருவன் வழக்காடுகிறான். ஒவ்வொரு மதமும்மற்றவற்றைப்போலவே (சமுசாரக்) கடலிலிருந்து மீட்கும் சக்தி வாய்ந்ததாக வுள்ளதென்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். ஹிந்து கோவில்கள் அல்லது கிறிஸ்தவ ஆலயங்கள் முதலியவற்றிலுள்ள வித்தியாசமென்று நீங்கள் கேள்விப்பட்டதனைத்தும் வெறும் மூட பக்தியின் தொகுதியேயாகும். அந்த ஒரே கடவுளே எல்லோரையும்திருப்திசெய்கின்றார்; ஒரு ஜீவனை ரக்ஷிக்கவோ அன்றி அதற்கு முக்தியளிக்கவோ, நீயோ அன்றி நானோ அல்லது ஒரு குறிப்பிட்டஎந்தக்கூட்டத்தினரோ பொறுப்பாளிக ளல்லர். சர்வ சக்திவாய்ந்த அந்த ஒரே கடவுளே எல்லோருக்கும் உத்தரவாதி யாவார். தாங்கள் கடவுள்

நம்பிக்கை யுடையவர்கள்என்று தாமே பறை சாற்றிக்கொண்டு, அதே சமயத்தில் கடவுள் எல்லா உண்மையையும் ஒரு சிறு கூட்டத்தினருக்கே தெரிவித்துள்ளார் என்றும், அவர்களே ஏனைய மக்கட் டொகுதி முழுதுக்கும் ரக்ஷகர்களெனவும் எப்படிக் கருதக்கூடும் என்பதுபற்றி என்னல் ஒன்றும் தெரிந்துகொள்ளமுடியவில்லை. எங்ஙனம் இதை மதம் என்று சொல்வது? நேருக்குநேர் காண்பதே—அநுபவமே மதம். ஆனல் வெறும் பேச்சு, நம்புவதற்கு மாத்திரமே முயல்வது, இருட்டில் வீணுகத் தடவிக்கொண்டிருத்தல்,முன்னோர்கள் வார்த்தைகளைக்கிளிப்பிள்ளைகள்போல் உச்சரிப்பது முதலியனவே மதம் என நினைப்பதும், மத உண்மைகளிலிருந்து வெறும் ராஜீய விஷயங்களைத் தேடிக்

கொள்வதென்பதும் ஒருக்காலும் மத மாகாது. ஒவ்வொரு மதத்திலும்,— எங்களினின்று மிகவும் புறம்பானவர் களென்று நாங்கள் கருதும் மகம்மதியர் மதத்திலும்-எப்போதேனும் மதத்தை அனுபவமாக்க முயற்சிக்கும் ஒருவர் தோன்றினல், அவர் வாயிலிருந்து "எல்லோருக்கும் பொதுவான கடவுள் நீரே; எல்லோருடைய இதயத்திலிருப் பவரும்நீரே; நீரேஎல்லோருக்கும் வழி காட்டுபவராயும் ஆசாரியராகவும்இருக் கின்றீர்; நாங்கள் கவனிப்பதினும் இவ் வளவென்று கூற முடியாதபடி அதிக மாகஉமது குழந்தைகளின் இருப்பிடத் தைப் பராமரித்து வருகின்றீர்" என் னும் அதி உன்னதமான வார்த்தைகள் வெளிவருகின்றன. எந்த மனித னுடைய நம்பிக்கையையும் கலைக்க

முயற்சி செய்யாதேயுங்கள்; கூடுமானால் வேறு நன்மை ஏதேனும் புரியுங்கள். உங்களால் முடியுமானால் ஒரு மனிதன் உயர்ச்சியடைய உதவுங்கள். ஆனால் அவனது இயற்கையிலுள்ளதைச் சிதைத்துவிடவேண்டா. வேண்டுமெனில் ஒரு கணப்போதினுள்ளே தம்மை ஆயிரம் மனிதராக மாற்றிக் கொள்ளவும் எவரால் இயலுமோ அவர் ஒருவரே ஒருண்மை ஆசாரியராவர். விரும்பிய அளவிலே தாம் மாணவனது நிலைமைக்கு இறங்கிவந்து, தமது ஆத்ம நிலையை மாணவனது ஆத்மநிலைக்கு ஏற்றவாறு மாற்றி, மாணவனது கண்கொண்டு பார்க்கவும், அவனது காதுகொண்டுகேட்கவும், அவனது மனத்தினாலே எண்ணவும் எவரால் கூடுமோ அவரே ஓர் உண்மை ஆசாரியர் ஆவர்.

அவ்வித ஆசாரியரே உண்மையாகப் பிறருக்குப் போதிக்கக்கூடும். வேறு எவராலும் போதிக்க முடியாது. அழித்தல் முறை, நாஸ்திகவாதம், தகர்த்தெரிதல் முதலிய சுபாவத்தோடுகூடிய உலகின்கண்ணுள்ள ஆசாரியர்கள் ஒரு சிறிதும் நன்மை செய்யமாட்டார்கள்.

இந்த உடலி லிருக்கும்போதே மனிதன் பரிபூர்ணத் தன்மையை அடைய முடியும் என்பதை எனது குருநாதரது சந்நிதியிற் கண்டுகொண்டேன். அவர் வாயினின்றும் சாப வார்த்தைகள் ஒருபோதும் வெளி வந்ததில்லை; என்றும் அவர் எவரையும் குறைகூறியதும் இல்லை. அவருடைய கண்கள் ஒரு சிறிதும் தீமையைக் காணக்கூடாதனவாயிருந்தன; தீமையை எண்ணும் சக்தி முழுதையும்இழந்ததாய் இருந்தது அவ

ரது மனம். எங்கும் நன்மையைத் தவிர்த்து வேறொன்றும் அவர் கண்டதில்லை. கண்டோர் வியக்கும்படியான அவ்வளவு பரிசுத்தம், எண்ணும் போதே அச்சத்தை விளைவிக்கும் அவ்வளவு கடிய தியாகம்—இவையேஆத்மஞானத்தின் மறைபொருளாவன. "கர்மத்தினாலன்று; குழந்தைகளைப்பெற்று வமிசத்தை விருத்தி செய்வதாலன்று; பெருந் தனத்தாலுமன்று; பற்றின்மை—தியாகம் ஒன்றினாலேயே அமிருதத்தை(அழியாத்தன்மையை) அடைய முடியும்" என்று வேதங்கள் விளம்புகின்றன. "உன்னிடத்துள்ள அனைத்தையும்விற்று ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டு என்னைப் பின்பற்று" என்கின்றார் இயேசு பெருமான். இவ்விதமாகவே எல்லா முனிவர்களும்,

தீர்க்க தரிசிகளும் எடுத்துக்கூறியிருப்ப தோடுகூட இவ்வுண்மையைத் தமது வாழ்க்கைகளிலும் அனுசரித்துள்ள னர். துறவில்லாமல்—தியாகமில்லாமல் உயர்ந்த ஆத்மஞானத்தை எங்ஙனம் அடைதல் முடியும்? எவ்விடத்திலிருந்த போதிலும் மதக்கொள்கை எல்லாவற் றிற்கும் பற்றின்மையே—தியாகமே முதுகெலும்பாகும். எங்கெங்குத் தியா கம் குறைபடுகின்றதோ அவ்விடத்தி லெல்லாம் இந்திரியங்கள் மதத்தில் பிர வேசித்து ஆத்ம ஞானத்தை அழியும் படிச் செய்வதை நீங்கள் பார்ப்பீர்கள்.

அப்பெரியார் தியாக உருவினரா கவே விளங்கினர். எங்கள் நாட்டிலே ஒருவன் சந்நியாசம் பெற விரும்பின் அவன் உலக சம்பந்தமான சொத்து சுதந்திரங்களையும் பட்டம் பதவிகளை

யும் முற்றிலும் நீக்கிவிட வேண்டுவது அவசியமானதாகும். எங்கள் குருநாதரும் அவ்வாறே அதைத் தமது வாழ்க்கையில் உண்மையாக நிறைவேற்றினார். 'நம்மிடமிருந்து அவர் ஏதேனும் ஒரு பரிசுபெற இசைந்திருப்பாரானல் நாம் மிகவும் பாக்கியவந்தராய்விட்டிருப்போம்' என்று எண்ணிய மாந்தர் பலர் இருந்தனர். அவர் அங்கீகரிப்பதாய் இருந்தால் அவர்கள் ஆயிரக் கணக்கான ரூபாய்களும் கொடுத்திருப்பர். ஆனல் அவரோ அத்தகைய மாந்தரிடமிருந்துதான் விலகிச் செல்வது வழக்கம். அவர் பெண்; பொன் ஆசைகளை முற்றிலும் வென்று விளங்கிய தீரராகத் திகழ்ந்தார். அவர் இவ்விரண்டினது எண்ணங்கள் ஒரு சிறிதுமே இல்லாது விளங்கினர்; இந்நாட்டிலே அத்தகைய

பெரியார்கள்இருக்கவேண்டியது—மிக அவசியம். 'அவசியமானவை' என்று சொல்லிக்கொண்டும், அவற்றைத் தகுதிக் கதிகமாகப் பெருக்கிக்கொண்டும் அவைகளில்லாமல்ஒருசிலநாட்கள் கூட உயிர்வாழ முடியாதென்று கருதியும் மாந்தர் வாழ்க்கையை நடத்தும் இந்நாட்களிலே இத்தகைய பற்றின்மை—இத்தகைய தியாகம் வேண்டுவதுஅவசியமே. இப்படிப்பட்ட இக்காலத்திலே உலகத்திலுள்ள கடவுள்நம்பிக்கையற்ற மனிதர்கள் முன்பு ஒருவர் எழுந்து பிரபஞ்சத்தில் உள்ள பெருந் தனத்தையோ பெரும் புகழையோ ஒரு சிறிதும் கவனியாது உலகில் வாழ முடியுமென்பதை நிரூபித்துக் காட்ட வேண்டிய தவசியமாகும். அவ்விதமனிதர்கள் இருந்தே வருகின்றனர்.

அவரது வாழ்க்கையின் மற்றொரு அம்சமாக விளங்கியது பிறரிடத்தில் அத்யந்த அன்பு செலுத்துவ தாகும். எனது குருநாதர் வாழ்க்கையின் முதற் பாகம் ஆத்ம ஞானம் சேகரிப்பதிலும் எஞ்சிய நாட்கள் அதைப் பிறர்க்குப் பகிர்ந்து கொடுப்பதிலுமாகச் செல வழிக்கப்பட்டன. எங்கள் தேசத்திலே ஒரு ஸந்நியாசியையோ அன்றி மதகுரு வையோ காணச் செல்லுங்கால் ஜனங் கள் உங்களைப்போன்ற வழக்கங்களை அநுசரிப்பது இல்லை. ஏதோ ஒன்றைப் பற்றிக் கேட்பதாகச் சிலர் அவரிடம் வருவர். ஏதேனும் ஒரு கேள்விகேட்ப தற்கோ அவர் வாயினின்றெழும் ஒரு வார்த்தையைக் கேட்பதற்கோ நூற் றுக் கணக்கான மைல்கள் கால்நடை யாக நடந்து வருவர் சிலர். "நான்

மோக்ஷ மடைவதற்கான ஒரு வார்த்தையைக் கூறுங்கள்'' என்று கேட்பர் மற்றும் சிலர். இவ்வித நோக்கத்தோடேயே எங்கள் நாட்டில் மதகுருவைக் காணச் செல்வது மரபு. எங்கு அப் பெரியார் அதிகமாகக்காணப்படுவரோ அவ்விடத்திற்குத் திரள் திரளாக ஜனங்கள் யாதொரு ஆசார நியதிகளையும் கைக்கொள்ளாதுவருவார்கள். அவரை ஒரு மரத்தடியில் இருக்கக் கண்டால் அவ்விடத்திலேயே ஒரு கேள்வியைக் கேட்பார்கள். ஒரு கூட்டம் செல்வதன் முன் மற்றொரு கூட்டம் வந்துசேர்ந்து விடும். ஆகவே ஒரு மனிதர் அதிகமாகப் போற்றப்படுவாராகில் சிற்சில வேளைகளில் இரவுபகலாக அவருக்கு ஓய்வு ஒழிவு இராது. இடைவிடாமல் அவர் பேசிக்கொண்டே யிருக்கவேண்

டும். மணிக் கணக்காக மாந்தர் வந்து கொண்டேயிருப்பர் ; அவரும் அவர்கள் அனைவர்க்கும் உபதேசித்தவண்ணமாகவே யிருப்பர்.

ஆகவே மாந்தர் திரள் திரளாக இவரிடம் சந்தேகந் தெளிய வந்தனர். அவரும் நாளின்இருபத்துநான்கு மணியில் இருபது மணி நேரம் பேசிக்கொண்டிருப்பர். இது ஒன்றிரண்டு நாட்கள் மாத்திரம் நடந்ததன்று; மாதக் கணக்காக, ஓயாது உழைத்ததின் பயனைத் தம் உடல் உடைபட்டுப்போனவரைக்கும் அவர் உபதேசம் செய்த வண்ணமாகவே யிருந்தார். மாந்தரிடம் இருந்த அவரது அபார அன்பு, ஆயிரம் ஆயிரமாகத் தம் உதவியை நாடியவர்களுள் அற்பமான ஒருவனுக்கும் உதவி செய்ய மறுத்தது இல்லை. அதன் பய

ளுய் நாளடைவில் அவரது தொண்டை யில் கொடிய வியாதி தோன்றத் தலைப் பட்டது. அப்போதும் அவரை இவ் விதத் தொண்டிலிருந்து தவிர்க்க முடி யாது போயிற்று. தம்மைக் காணும் பொருட்டு ஜனங்கள் ஆவல்கொண்டு நிற்கின்றனர் என்று அவர் கேள்விப் பட்டவுடனே அவர்களை உள்ளேவிடும் படி வற்புறுத்தி அவர்களது கேள்வி களுக்கெல்லாம் பதிலளித்து அனுப் புவார். இவ்விதம் சரீரம் தாங்கு வதற் கதிகமான பணிகளைத் தவிரு மாறு தடுத்த காலத்தில் அவர், "நான் அதுபற்றிக் கவலைப்படவில்லை; ஒரு மனிதனுக்கு உதவி செய்வதன் நிமித் தம் இவ்விதம் ஆயிரம் யாக்கைகளையும் இழந்து விடத் தயங்க மாட்டேன். ஒரே மனிதனுக்கு உதவிசெய்வதென்

பதானுலும் அது ஓர் புகழத்தக்க காரி யமே" என்று பதிலளிப்பதுண்டு. அவ ருக்குச் சிறிதும் ஓய்வே கிடையாது போயிற்று. ஒரு முறை ஒருவர் வந்து அவரைப்பார்த்து, "சுவாமி, தாங்க ளோர் பெரிய யோகியன்ருே? என் மனத்தை ஒரு சிறிது தாங்கள் சரீரத் தின்மீது செலுத்தி நோயை நீக்குதல் கூடாது?" என்று வினவினர். முதலில் அவர் அதற்குப் பதிலொன்றும் அளிக்க வில்லை; திரும்பவும் அதேகேள்வி கேட் கப்பட்டபோது அவர் சாந்தத்துடன், "நண்ப! உன்னை ஓர் ஞானி என்றே நினைத்தேன்; ஆனல் உலகமாந்தரைப் போன்றே உரையாடுகின்றனே. முன்ன மேயே இம்மனம் இறைவன்பால் அர்ப் பணம் செய்யப்பட்டுள்ளது. அதைத் திரும்ப எடுத்து ஆத்மாவின் வெறுங்

கூடாகிய சரீரத்தின் மீதா செலுத்த வேண்டு மென்கின்றாய் ?" என்று மறு மொழி பகர்ந்தார்.

இவ்விதம் அவர் போதனை செய்து வரும்போது சீக்கிரமே சரீரத்தை விட்டுப் போய்விடுவார் என்னும் செய்தி வெளியே எங்கும் பரவிய காலத்திலே ஜனங்கள் முன்னிலும் திரள் திரளாக அவரிடம் செல்லத் தலைப்பட்டனர். இத்தகைய பெரிய ஆத்மபோதகரிடத்திற்கு இந்தியாவில் ஜனங்கள் எவ்விதம் வருகின்றார்கள் என்பதைப் பற்றியும் எவ்விதம் அவர்களைச் சூழ்ந்துகொண்டு அவர்கள் உயிரோடிருக்கும்போதே கடவுளர்களாக ஆக்கிவிடுகின்றார்கள் என்பதைப் பற்றியும் உங்கள் மனத்தால் எண்ணிப் பார்க்கவும் முடியாது. அவர்களது ஆடையின் விளிம்பைத் தொடுவ

தற்காகவே ஆயிரக்கணக்கானோர் காத்துக் கொண்டிருப்பர். இவ்விதம் பிறர்பாலுள்ள தெய்வத்தன்மையைக் கண்ணியப்படுத்துவதாலேயே நம்மாட்டும் தெய்விகம் மிளிர்கின்றது—எது ஒன்றை விரும்பி மனிதன் போற்றுகின்றானோ அதை அவன் அடைவது நிச்சயம். இதே உண்மை எல்லாச் சமூகங்களுக்கும் பொருத்தமாகின்றது. இந்தியாவிற்குச் சென்று தேசிய சம்பந்தமான பிரசங்கம் செய்வீர்களாயின், அது எவ்வளவு சிறப்பானதா யிருப்பினும் அதைக்கேட்க வருவோர் மிகச் சிலராகவே யிருப்பார்; ஆனால் சமயத்தைப் பற்றிப் போதனை செய்யுங்கள்; வெறும் வார்த்தைகளோடு நில்லாது அதனை வாழ்க்கையில் வாழ்ந்து காட்டுங்கள். அப்போது உங்களைத் தரிசிப்

பதற்கும் உங்கள் பாதங்களைத் தொடு வதற்குமாக நூற்றுக்கணக்கானோர் கூடிவிடுவார்கள்.

இப்புனித மஹான் ஒருவேளை சீக்கிரம் தங்களை விட்டுப் போய்விடக் கூடுமென்று ஜனங்கள் கேள்விப்பட்ட போது முன்னிலும் மிகுதியாக வந்து சூழத் தலைப்பட்டனர். எனது குருநாதரும் தமது சரீரத்தைப்பற்றிய கவலை சிறிதும் கொள்ளாது அவர்களனைவர்க்கும் போதனை செய்தவண்ணமாகவே யிருந்தார். இதை எங்களால் தடுக்க இயலாது போயிற்று. அநேகர் வெகு தூரங்களிலிருந்து வந்திருந்தமையால் அவர்களுக்கு மறுமொழி பகராமல் நித்திரைகொள்ள மாட்டார். "என்னால் பேச முடிந்தவரைக்கும் நான் அவர்களுக்குப் போதனை செய்தே தீர

வேண்டும்" என்று அவர் சொல்வது வழக்கம். இந்தத் தமது வாக்குக்கு ஏற்றவாறே அவர் நடந்தும்வந்தார். ஒருநாள், அன்று தமது சரீரத்தை நீத்துவிடப் போவதாகக் கூறி, மிக உயர்ந்த வேத மந்திரமொன்றை உச்சரித்தவண்ணமாகச் சமாதியில் புகுந்து விட்டார்.

அவருடைய கருத்தையும் அவர் உலகுக்குக் கொண்டுவந்த புனிதமான செய்தியையும் அறிந்தவர்களுள் ஒரு சிலரே உலகினர்க்குப் போதிக்கும் சக்தி வாய்ந்தவர்களாய் இருந்தனர். அவரது சீடர்களுள், சில வாலிபர்கள் முற்றுந் துறந்த சந்நியாசிகளாகி, அவர் விட்டுச் சென்ற காரியத்தை மேற்கொண்டு நடத்தச் சித்தமா யிருந்தனர். அவர்களை நசுக்குவதற்கான

பிரயத்தனங்கள் பல செய்யப்பட்டன. ஆனால்குருநாதரது அருட்சத்தி அவர்கள்பால் இருந்தமையால் அவர்கள் உறுதியுடன் நின்றார்கள். புனித வாழ்க்கையோடு அவர்கள் அநேக ஆண்டுகள் தொடர்புற்றிருந்தமையாலே தங்கள் இடம் விட்டகலாமல் உறுதியுடன் நின்றார்கள். இவ்வாலிபர்கள், அவர்களுள் சிலர் பெருந் தனவந்தர்களது குடும்பத்திலிருந்து வந்தவர்களாயிருப்பினும், தாங்கள் பிறந்த அந்நகர வீதிகளிலேயே பிச்சையெடுத்துச் சந்நியாசிகளாக வாழ்ந்து வந்தார்கள். ஆரம்பத்தில் அவர்கள் பல எதிர்ப்புக்களுக்கு ஆளானார்கள். ஆனால் அவர்கள் சிறிதும் தளர்ச்சி கொள்ளாமல் உறுதியாக நின்று நாளடைவில் இந்தியாவெங்கணும் அப்பெரியாரது உப

தேச மொழிகளைப் பரவச் செய்தார்கள். இம்மனிதர் வங்காள தேசத்தின் ஒரு சிறு கிராமத்திலே பிறந்து, கல்வி சிறிதுமில்லாமலே தனித்த திட சங்கற்பத்தாலேயே மெய்ப்பொருளை சாக்ஷாத்கரித்து, அதைப் பிறர்க்கும் கொடுத்து, அது மேல்நிலைகொண்டு நிற்பதற்காகச் சில வாலிபர்களையும் வைத்துச் சென்றுளார்.

இன்று இந்தியாவின் கோடிக்கணக்கான மக்கள் எல்லாரும் ஸ்ரீ ராமகிருஷ்ணரை அறிந்துள்ளார்கள். அது மாத்திரமல்லாமல் அப்பெரியாரது மாபெரும் சக்தி இந்தியாவிற்குப் புறம்பேயும் பரவியுள்ளது. இவ்வுலகத்தில் எங்கேனும், ஒருண்மை வார்த்தையோ அன்றி ஆத்ம சம்பந்தமான வார்த்தையோ நான் பேசி இருப்பேனாயின்

அதற்கு நான் அவருக்குக் கடமைப் பட்டவனு யிருக்கின்றேன்; பிழைக ளேதும் பேசி யிருந்தால் அவைகள் என்னுடையனவே யாகும்.

"கோட்பாடுகளைப் பற்றிக் கவலைப் படாதேயுங்கள். ஆசாரங்கள், சம்பிர தாயங்கள், கோவில் முதலியவைகளைப் பற்றிக் கவனிக்கவேண்டா. ஒவ்வொரு மனிதனுள்ளிருக்கும் சாரமான, சத் துப்பொருளான தெய்வத் தன்மை யோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவைகள் ஒன்று மில்லாது போய்விடு கின்றன. எவ்வளவுக் கெவ்வளவு இத் தெய்விகத் தன்மை ஒருவனிடத்தில் அதிகரிக்கின்றதோ அவ்வளவுக் கவ் வளவு நன்மை செய்யும் சக்தியும் அவ னிடம் பெருகும். முதலில் இதைச் சம்பாதித்துக் கொள்ளுங்கள். ஒரு

வரையும் குறை கூறவேண்டாம். ஏனென்றால் எல்லாக் கொள்கைகளும் சம்பிரதாயங்களும் தம்முள் ஏதோ கொஞ்சம் நன்மையையும் வைத்துக் கொண்டிருக்கின்றன. மதமென்பது வெறும் வார்த்தையன்று; பேரும் சம்பிரதாயங்களுமல்ல. ஆனால் அது ஆத்ம அநுபவமே என்று உங்கள் வாழ்க்கையில் நிரதிசயமாகக் காட்டுங்கள். ஒன்றை அநுபவித்தவர்களாலேயே அதன் உண்மையை அறிந்து கொள்ள முடியும்; ஆத்மஞானம் அடைந்தவர்களே அதைப் பிறர்க்கும் அளிக்கமுடியும். அவர்களே மனித வர்க்கத்திற்குப் பெரிய ஆசாரியர்களாக விளங்குவர். அவர்களே ஞானவொளியின் சக்தியாவார்கள்" என்பதே ஸ்ரீ ராமகிருஷ்ணர் இக்கால இந்

தியாவிற்குக் கொண்டு வந்த செய்தி யாகும்.

இவ்வித பெரியார்கள் எந்த தேசத்தில் அதிகமாகத் தோன்றுகிறார்களோ அந்த தேசம் மேன்மையடைவது நிச்சயம். எந்த தேசத்தில் இவ்வித மனிதர்களே இருப்பதில்லையோ அந்நாடு அதோகதியாவது திண்ணம். அதை ஒன்றும் காப்பாற்ற முடியாது. ஆகவே எனது குருநாதர் மனித வர்க்கத்திற்குக் கொண்டுவந்த செய்தி என்னவென்றால் "சமய வாழ்க்கையைக் கைக்கொண்டு நீயே மெய்ப்பொருளை சாக்ஷாத்காரமாக அடைவாயாக" என்பதாகும். உங்களுடைய சகோதரர்களுக்காக உங்களை முற்றிலும்கொடுத்துவிட வேண்டுமென்றும், அவர்களிடத்திலே அன்பைப் பற்றி

வெறும் வார்த்தைகள் மாத்திரத்திலே காண்பிக்காமல் நீங்கள் அவ்வார்த்தைகளைக் காரியத்திலும் காட்டும் பொருட்டு ஈடுபட வேண்டுமெனவும் அவர் விரும்புவார். தியாகத்திற்கும் பிரத்யக்ஷ அனுபவத்திற்குமானகாலம் வந்து விட்டது. அதன் பிறகு உலகத்திலுள்ள சகல சமயங்களிலும் சமரசத்தைக் காண்பீர்கள்; சண்டைக்கு அவசியமில்லையென்பதையும் தெரிந்து கொள்வீர்கள். அதன் பிறகு மனித வர்க்கத்திற்கு உதவிபுரியச் சித்தமாவீர்கள். எல்லா மதங்களுக்கும் மூலாதாரமாயிருக்கும் ஒற்றுமைத் தன்மையைத் தெளிவாக எடுத்துக் காட்டி (உலக மெங்கணும்) பரவச்செய்வதே எனது குருநாதரின் உட்கருத்தாகும். மற்ற ஆசாரியர்களோ பிரத்தியேக

மாகத் தங்கள் பேரால் விளங்கும் இதர மதங்களைப் போதித்தார்கள்; ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இப் பெரிய ஆசாரியரோ தமக்குச் சொந்த மானது என்று எதையும் பேசவில்லை. உண்மையில் உலகிலுள்ள மதங்கள் யாவும் ஒரே மதத்தின் அங்கங்கள் என்பதைத் தமது அனுபவவாயிலாய் அறிந்திருந்தமையினால் யாதொருமதத் தையும் அவர் இகழ்ந்தவரல்லர்.

ஸ்ரீ ராமகிருஷ்ண சத்குரு சரணம்.